# பழிவாங்குதலுக்கு இருதயம் கதறுகின்றபோது

## (1 சாமுவேல் 24-26; 2 சாமுவேல் 1)

*இந்தப் பாடத்தை வாசிக்கப் போகின்ற ஒவ்வொருவரையும் எனக்குத் தெரியாது, ஆனால் ஒவ்வொருவரைப் பற்றியும் - நான் இதுவரைக்கும் சந்தித்தேயிராதவர்களைப் பற்றியும் கூட - சிலவற்றை நான் அறிந்திருக் கின்றேன்: நீங்கள் ஒவ்வொருவரும் யாரோ ஒருவரால் புண்படுத்தப் பட்டிருக்கிறீர்கள். பல ஆண்டுகளுக்கு முன்னதாகவோ அல்லது நேற்றைய தினம் என்று சொல்லக் கூடிய சமீப காலத்திலோ எப்பொழுதாகிலும் நீங்கள் மனம் புண்படுத்தப்பட்டிருக்கலாம். ஒருவேளை உங்கள் நண்பர் உங்கள் நம்பிக்கைக்குத் துரோகம் செய்து உங்களைக் காட்டிக் கொடுத்திருக்கலாம். ஒருவேளை உங்கள் ஆசிரியர், பயிற்சியாளர் அல்லது முதலாளி உங்களை நியாயமாக நடத்தாமல் இருந்திருக்கலாம். ஒருவேளை உங்கள் குடும்ப நண்பர்கள் உங்களைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கலாம்/திட்டியிருக் கலாம். ஒருவேளை உங்களுக்கு நன்கு பழக்கமானவர் உங்கள் நட்புறவை தமக்கு அநுகூலமாக்கியிருக்கலாம். ஒருவேளை உங்கள் கணவர்/மனைவி உங்களைக் கைவிட்டிருக்கலாம். ஒருவேளை உங்கள் விரோதியொருவர் உங்கள் வாழ்வை அழிக்கக் கிளம்பியிருக்கலாம். நாம் யாவருமே ஒரே விதமாகவே புண்படுத்தப்பட்டிருப்பதில்லை, ஆனாலும் நாம் புண்படுத்தப் பட்டுள்ளோம்.*

*இன்னொருவரிடம் இருந்து நீங்கள் பெற்றுக் கொண்ட மிகப் பெரிய புண்படுதலைப் பற்றி ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். அந்த இதய வலியை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து பாருங்கள். இப்போது, அந்த சகிக்க இயலாத தருணத்தில் நான் உங்களிடம் வந்து, பளபளக்கும் உலோகப் பெட்டி ஒன்றைத் தருவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்தப் பெட்டியின் மீது ஒரு சிகப்பு நிறத்திலான பொத்தான் உள்ளது. நான் உங்களிடத்தில், "நீங்கள் இந்தப் பொத்தானை அமுக்கினால், நீங்கள் இப்போது படுகின்ற வேதனை எல்லாவற்றையும் உங்களைத் துன்புறுத்திய வர் அப்படியே உணருவார். நீங்கள் இந்தப் பொத்தானை அமுக்குகின்றீர் களா இல்லையா என்பதை, உங்களைத் தவிர வேறு யாரும் அறிய மாட்டார்கள்" என்று கூறுவதாக வைத்துக் கொள்வோம். பின்பு நான் உங்களை விட்டுச் சென்று விடுகின்றேன். இப்பொழுது நான் உங்களை ஒன்று கேட்கின்றேன்: நீங்கள் உணர்ந்த வலியை மனதில் ஆழ்ந்து சிந்தித்தவர்களாய், நீங்கள் அந்தப் பொத்தானை அமுக்குவீர்களா?*

ஒரு விஷயம் உறுதியானதாக உள்ளது: நம்மைச் சுற்றிலும் உள்ள உலகம் "அந்தப் பொத்தானை அமுக்கு! அந்தப் பொத்தானை அமுக்கு!" என்று அலறிக் கொண்டுள்ளது. வண்டியின் பம்பரில் ஒட்டியுள்ள ஸ்டிக்கர்கள் இதையே கூக்குரலிடுகின்றன: "எனக்குப் பைத்தியம் பிடிக்க வில்லை; நான் பழிவாங்குவேன்.'' திரைப்படங்கள் இதையே கூக்குரலிகின்றன: "செல்லுங்கள். எனக்கு ஒரு நாளை ஏற்படுத்துங்கள்!" தொலைக் காட்சி விளம்பர நிகழ்ச்சிகள் இதையே கூக்குரலிடுகின்றன: "மனம் புண்பட்டிருக்கின்றீர்களா? வழக்குரைஞர் ஐ.எம்.ஏ. ஸ்வின்ட்லரை அழையுங்கள், அவர்களுக்கு நாங்கள் கட்டணம் செலுத்திக் கொள்ளு வோம்!"[1] உலகமானது எல்லாவிடத்திலும் பழிவாங்குதலுக்காகக் கதறு கின்றது; நமது கதாநாயகர்கள் தங்களை அடக்குபவர்களைப் பழி வாங்கு பவர்களாயிருக்கின்றனர். (தன் மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டிய [மத். 5:39] யாராவது ஒருவரைக் "கதாநாயகன்" என்று அழைத்த நிகழ்ச்சியை நீங்கள் எப்பொழுது கடைசி முறையாகக் கண்டீர்கள்?)

இது மிகவும் கடினமானது, இல்லையா? நாம் குற்றஞ் சாட்டப்படும் போது, வையப்படும்போது, அல்லது தவறாகப் பயன்படுத்தப்படும்போது, நமது இருதயம் இயல்பாகவே பழிவாங்குதலுக்குக் கதறுகின்றது. பழிவாங்குதலின் பொத்தானை அமுக்குவது என்பதே நமது இயல்பான சாய்வாக உள்ளது. இருப்பினும் கிறிஸ்தவர்களுக்கு, "தேவன் என்ன அந்தப் பொத்தானை அமுக்கும்படி விரும்புவாரா?" என்பது கேள்வியாக உள்ளது. "அவர் அதை அனுமதிக்க மாட்டாரென்றால், என் மீது ஆதிக்கம் செலுத்து கின்ற அந்த விருப்பத்தை நான் எவ்வாறு கையாள முடியும்?" என்பது இன்னொரு கேள்வியாக உள்ளது. தாவீதின் வாழ்க்கையிலிருந்து நாம் பெறும் இந்தப் பாடத்தில், நாம் அந்தக் கேள்விகளுக்கு குறைந்தது ஒரு பகுதியாவது பதில் அளிக்கலாம் என்று நம்புகின்றோம். 1 சாமுவேல் 24-26 அத்தியாயங்கள் நமது பிரதான வேத பாடப்பகுதியாக இருக்கும். பழி வாங்குதல் என்ற பாடக் கருத்து இந்த அத்தியாயங்களை ஒன்றாய்ப் பிணைப்பதாக உள்ளது. நம்மைப் புண்படச் செய்தவர்களைப் புண் படுத்துதல் என்ற இயல்பூக்கத்தைக் கையாள்வதற்கு நமக்கு உதவக் கூடிய நான்கு ஆலோசனைகளை இந்த வசனப்பகுதிகளில் இருந்தும், 2 சாமுவேல் 1ம் அத்தியாயத்திலிருந்தும், எடுத்துக் கொடுக்க விரும்புகின்றேன்.

## ஆதாரமூலத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள் (1 சாமுவேல் 24)

ஒரு சில நாட்களுக்கு முன்பு, எனது மனைவியும் நானும், என்னைப் பற்றி விமர்சித்தவர் ஒருவர் கூறிய விமர்சனத்தில், விசேஷமாக என்னை விரும்பாததாக யாரோ ஒருவர் குறிப்பிட்டபோது, இன்னொரு தம்பதியைக் காணச் சென்றிருந்தோம். இந்த விமர்சனத்தின் இயல்பு என்னைச் சற்றே சிரிக்கச் செய்தது. யாரோ ஒருவர், "ஆதார மூலத்தை மட்டும் ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்" என்று கூறினார்; பின்பு நாங்கள் அதிகம் பக்திவிருத்தியூட்டுகின்ற தலைப்புக்களுக்குக் கடந்து சென்றோம்.

*நீங்கள் சிறுபிள்ளையாயிருந்த போது, அநேகமாகக் குறைந்தது ஒருமுறையாகிலும் உங்கள் பெற்றோரிடத்தில் உங்களைப் பற்றி யாரேனும் கூறிய இரக்கமற்ற வார்த்தைகளைப் பற்றிச் சொல்லியிருப்பீர் கள், அவர்கள் பதிலுக்கு, "ஆதாரமூலத்தைச் சிந்தித்துப் பார் - பின்பு அதை மறந்து விடு" என்று கூறியிருப்பார்கள். அந்த இரக்கமற்ற வார்த்தைகளை யார் கூறினார் என்பதை நீங்கள் தீவிரமாக ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், அதைக் குறித்துக் கவலைப்படுவதற்கு அது தகுதியற்றது என்பதை நீங்கள் உணர்ந்து அறிவீர்கள் என்பதே இங்கு கருத்தாக உள்ளது.*

*இந்தக் கொள்கையைத் தாவீதின் சூழ்நிலைக்கு நடைமுறைப்படுத்துங் கள். அவரது பரிதாபமான நிலைக்குக் காரணமாயிருந்தது யார்? தனக்குத் தானே விரோதியாயிருந்த தறிகெட்ட ஒரு அரசர்தானே?*[2]

*முன்பு நாம் இவ்வரலாற்றை விட்ட இடத்தில், தாவீதும் அவர் மனிதர் களும் சவுலின் படையினால் பிடிபடுவதிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்கள். பெலிஸ்தரோடு யுத்தம் செய்ய இராஜா சென்று விட்ட பின்பு, "தாவீது அவ்விடத்தை [மாகோன் வனாந்தரத்தை] விட்டுப் புறப்பட்டு, என்கேதியிலுள்ள அரணிப்பான இடங்களில் தங்கினான்" (1 சாமு. 23:29).*

*என்கேதி என்பது எருசலேமில் இருந்து தென்கிழக்கில் சுமார் முப்பத்தைந்து மைல்கள் தொலைவில் சவக்கடலின் மேற்குக் கரையின் மத்தியில் அமைந்திருந்தது. அதைச் சென்று கண்டவர்கள் அதன் அழகைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்கள்: கடல் மட்டத்திலிருந்து சுமார் அறுநூறு அடிகள் உயரத்தில் பளபளக்கும் நீரூற்று ஒன்று எழும்பிப் பெருகி, பாலைவனத்தினூடே பெருக்கெடுத்தோடுகிறது. அங்கு ஐந்து நீர்வீழ்ச்சி களும், பளிங்கு போலத் தெளிவான நீர் நிரம்பிய குட்டைகளும், வளமான புல்வெளிகளும், வண்ணமிகு மலர்களும் உள்ளன. உறுதியாய் நடக்கக் கூடியவர்களால் மட்டும் கால்நடையாய் நடந்து சென்று அடையக் கூடிய ஒரு நடைபாதையின் மூலம் மட்டுமே இந்தப் பாலைவனப் பசுஞ் சோலைக்குச் செல்ல முடியும். இங்கு தாவீதும் அவரது மனிதர்களும் தங்கள் உடல்களையும் ஆவிகளையும் ஓரளவுக்கு பாதுகாப்புடன் புத்துயிர்ப்பு பெறச் செய்து கொள்ள முடிந்தது.*

*இருப்பினும், என்கேதியின் சொர்க்கத்தில் தாவீதின் "இளைப் பாறுதலும் பொழுதுபோக்கும்" குறுகிய ஆயுளில் முடிந்து போயின. அத்தியாயம் 24, பின்வருமாறு தொடங்குகின்றது: "சவுல் பெலிஸ்தரைப் பின்தொடர்ந்து திரும்பிவந்தபோது, 'இதோ, தாவீது என்கேதியின் வனாந்தரத்தில் இருக்கிறான்' என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது சவுல்: இஸ்ரவேல் அனைத்திலும் தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம்பேரைக் கூட்டிக்கொண்டு, தாவீதையும் அவன் மனுஷரையும் ... தேடப் போனான்" (24:1, 2).*

*இது வேதாகமத்திலுள்ள சங்கடம் தரும் எதார்த்தமான வசனப் பகுதிகள் ஒன்றுக்கு நம்மைக் கொண்டு வருகின்றது: "வழியோரத்திலிருக்கிற ஆட்டுத் தொழுவங்களிடத்தில் அவன் வந்தபோது, அங்கே ஒரு கெபி இருந்தது; அதிலே சவுல் மலஜலாதிக்குப் போனான்" (24:3அ). மூல*

மொழியாகிய எபிரெய மொழியில், "சவுல் தம் கால்களை மறைத்துக் கொள்ள சென்றார்" (KJVயில் கவனிக்கவும்) என்றுள்ளது, இது இயற்கைக் கடனைக் கழிக்கச் செல்லுதலுக்கு எபிரெய மொழியில் வழங்கப்படும் மறைவுக் கூற்றாக உள்ளது. (இது தமிழ் மொழியில் நாம், "வெளியே போய் விட்டு வந்து விடுகிறேன்" என்று கூறுவதற்கு இணையானதாகும்.)

"தாவீதும் அவன் மனுஷரும் அந்தக் கெபியின் பக்கங்களில் உட்கார்ந்திருந்தார்கள்" (24:3ஆ)[3] என்ற விஷயத்தைச் சவுல் அறிந்திருக்கவில்லை. தாவீது, அநேகமாக சவுல் வரும் ஒலியைக் கேட்டு, அந்தப் பகுதியில் ஏராளமாயிருந்த பிரதான குகைகள் ஒன்றில் தமது மனிதர்களை ஒளித்து வைக்க முடிவு செய்திருக்கலாம். (அந்தப் பகுதியில் இருந்த குகைகள் தாவீதின் தோழர்களான அறுநூறு பேரையும் - அதை விட அதிகமான மனிதர்களையும் கூட - ஒளித்து வைக்கப் போதுமான அளவுக்குப் பெரியவைகளாய் இருந்தன.)

தாவீதின் மனிதர்கள் உணர்வெழுச்சியடைந்தார்கள்! அவர்கள் தாவீதிடம் இரகசியமாக, " 'இதோ, நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்; உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக' என்று கர்த்தர் உன்னோடே சொன்ன நாள் இதுதானே" என்றார்கள் (24:4அ). கர்த்தரிடம் இருந்து தாவீதுக்குக் கிடைத்த இந்த வாக்குத்தத்தத்தை என்னால் சரியாகக் குறிப்பிட முடியவில்லை. ஏதோ ஒரு காலத்தில் தேவன் இதை தாவீதிடம் ஏற்படுத்தியிருந்திருக்கவும், அதைப் பற்றி அவர் தமது மனிதர்களிடத்தில் கூறியிருக்கவும் சாத்தியம் உள்ளது - ஆனால் தாவீது சவுலைக் கொல்வது தேவனுடைய சித்தம் என்பது பற்றி தாவீதின் மனிதர்கள் மிகவும் நேர்மறையான போக்குடன் இருந்திருக்கவும் அதனால் அவர்களே அந்த மேற்கோளை ஏற்படுத்தியிருக்கவும் சாத்தியம் உள்ளது. அவர்கள் கர்த்தருடைய வாயில் வார்த்தைகளை இடும் முதல் மனிதர்களாகவோ அல்லது கடைசி மனிதர்களாகவோ இருக்க மாட்டார்கள்!

பழிவாங்குதல் பற்றிய ஒரு சில உண்மைகளைக் குறிப்பிட நாம் இவ்விடத்தில் சற்றுத் தாமதிப்போம்: (1) பழி வாங்கக் காத்திருக்கின்றவர்கள், தங்களைப் புண்படுத்தியவர் எதிர்த்துத் தாக்க முடியாத ஒரு தருணத்திற்காகக் காத்திருக்கின்றார்கள். அந்தக் குகையில் அப்பொழுது சவுல் இருந்த நிலையைக் காட்டிலும் அதிகமாக எதிர்த்துத் தாக்க இயலாத நிலையில் வேறு எவரும் இருப்பதாக நான் யூகிப்பதில்லை. தாவீதின் மனிதர்கள் பழிவாங்குதல் என்ற மாம்ச சிந்தனையினால் ஊக்குவிக்கப் பட்டவர்களாக, இதனைத் தேவன் கொடுத்த வாய்ப்பு என்று கண்டதில் சிறிதளவே வியப்புள்ளது. (2) யாரோ ஒருவரால் நீங்கள் புண்பட்டிருந்தால், உங்களுக்கு அண்மையில் இருப்பவர்கள், அநேகமாக, உங்களை நீங்கள் ஒரு வாய்ப்பைப் பெற்றால், "திருப்பி(உங்கள் விரோதியை)த் தாக்கும்படி" கூறுவார்கள். தாவீதின் மனிதர்களைப் போலவே இவர்கள், நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கு நல்ல காரணங்கள் பலவற்றைக் கொண்டிருப்பார்கள்: "அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்"; "அவனது மருந்தை அவனே ருசி பார்க்கட்டுமே"; "உன்னை மிதித்து அப்படி

உன்மேல் ஓடும் வரை அவனை அனுமதிப்பேயானால், நீ ஒருக்காலும் உன்னையே மதிப்பவனாயிருக்க மாட்டாய்." தாவீதின் மனிதர்களைப் போலவே, இவர்களும் தேவனை இவ்விஷயத்தினுள் கொண்டு வரவும் கூடும்: "தேவன் உனக்குச் சில உரிமைகளைக் கொடுத்துள்ளார் அல்லவா"; "நீ ஒரு கால் மிதித்துணியைப் போல் செயல்படுவதைத் தேவன் நிச்சயமாக உன்னிடம் எதிர்பார்ப்பதில்லை!"

இங்கு வரலாறு எதிர்பாராத திருப்பம் ஒன்றை மேற்கொள்ளுகின்றது. 24:4ம் வசனத்தின் முடிவுப் பகுதியானது, "தாவீது எழுந்திருந்து போய், சவுலுடைய சால்வையின் தொங்கலை மெள்ள அறுத்துக் கொண்டான்" என்று கூறுகின்றது. அதைக் கற்பனை செய்து பாருங்கள். அந்த மனிதர்கள் சவுலைக் கொலை செய்யும்படி தாவீதிடத்தில் வற்புறுத்திய பின்பு, அவர் தமது கத்தியை எடுத்துக் கொண்டு இருளில் சவுலை நோக்கி மெல்ல நழுவுவதை கற்பனைச் செய்து பாருங்கள். அந்த மனிதர்கள் ஒருவரையொருவர் விலாவில் இடித்துக் கொண்டு, அரசர் (கத்தியால்) குத்தப்பட்டார் அல்லது அவரது குரல்வளை அறுக்கப்பட்டது என்பதை அவர்களுக்குக் கூறக்கூடிய திணறல் மிக்க கூக்குரலுக்காகக் காத்திருந்தார்கள் - ஆனால் அவர்கள் (அவ்விதமான ஒலி எதையும்) கேட்க(முடிய)வில்லை. ஒரு கணத்தில், தாவீது தமது கத்தியை இன்னும் தம் கையில் வைத்திருந்தவராய்த் திரும்பி வந்தார், ஆனால் அந்தக் கத்தியில் இரத்தம் இல்லை. "என்ன நடந்தது?"; "நீ என்ன செய்தாய்?" என்ற கேள்விகளால் தாவீது துளைக்கப்பட்டார். அவர் (தாவீது) ஒரு மென்மையான புன்முறுவலுடன், சவுலின் இராஜரீக மேலாடையிலிருந்து (தாம் கத்தரித்தெடுத்திருந்த) ஒரு துண்டுத் துணியை உயர்த்திக் காண்பித்தார்.

பல கேள்விகள் மனதில் எழுகின்றன. "தாவீது எவ்வாறு பார்க்கவோ அல்லது கேட்கவோ படாமல் சவுலுக்கு அவ்வளவு நெருக்கமாகச் சென்றார்?" என்பது ஒரு கேள்வியாக உள்ளது. சவுல் குகைக்குள் நுழைந்த போது, ஒருவேளை தமது மேலாடையைக் கழற்றி ஒரு புறமாய் வைத்திருக்கக் கூடும். (நானாக இருந்தால் இதையே செய்திருப்பேன்.) இருப்பினும், தாவீது அதைச் செய்தது என்பது மிகவும் பதட்டத்திற்குரியதாகவே இருந்தது. "தாவீது, சால்வையின் தொங்கலைக் கத்தரித்து எடுத்தது ஏன்?" என்பது மிகவும் முக்கியமான கேள்வியாக உள்ளது. ஒருவேளை அவர் தம்மால் சவுலைக் கொல்லக் கூடிய சூழ்நிலையிருந்தும் தாம் அவரைக் கொல்லவில்லை என்பதை நிரூபிக்க வேண்டும் என்று தமது மனதில் எண்ணங் கொண்டிருந்தார் என்பது ஒரு காரணமாயிருந்திருக்கலாம் (24:11). ஆயினும், "அவர் ஒரு வாய்ப்பைப் பெற்றிருந்தும், சவுலை ஏன் கொலை செய்யாமல் விட்டுவிட்டார்?" என்பதுதான் மிகவும் முக்கியமான கேள்வியாக உள்ளது. அந்தக் கேள்விக்குப் பதிலளிக்க நாம் வேத வசனப் பகுதியைத் தொடர்ந்து வாசிக்க வேண்டும்:

> தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக்கொண்டதினிமித்தம் அவன் மனது அடித்துக் கொண்டிருந்தது. அவன் தன் மனுஷரைப் பார்த்து: "கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன்மேல் என்

*கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக; அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று சொல்லி (24:5, 6).*

*தாவீது தாம் செய்ததை நினைத்த பொழுது, அவர் மனம் அடித்துக் கொண்டது ஏன்? அவர், உடல் ரீதியாகச் சவுலைத் துன்புறுத்தியிருந்த தில்லையே; அவர் அரசரின் சால்வையைச் சற்றே சீர்குலைத்திருந்தார், அவ்வளவுதானே. தாவீது இருளில் நழுவிச் சென்ற பொழுது, உண்மையில் சவுலின் தொண்டையை அறுக்கத் திட்டமிட்டே சென்றார், ஆனால் கடைசி நேரத்தில் மனமாற்றம் அடைந்து, அவர் சால்வைத்தொங்கலில் ஒரு சிறு துண்டை வெட்டியெடுத்துக் கொண்டார் என்ற காரணத்தினால் இது (அவர் மனம் அடித்துக் கொண்டது என்பது) ஏற்பட்டது என்பதாகச் சிலர் நினைக்கின்றார்கள். சவுலை கொல்லும்படி தாவீது சோதிக்கப்பட்டார் என்பது மிகவும் உறுதியானதாயிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. என்னைக் கொல்வதற்கு யாரேனும் மீண்டும் மீண்டும் முயற்சி செய்திருந்து, நான் அவரை உதவியெதுவுமற்ற நிலையில் பிடித்திருந்து, என் கையில் பதமான ஒரு கத்தியை வைத்திருந்தால், மனிதத் தன்மைக்குக் குறைவானவனாயிருப் பேன் (அல்லது ஒருவேளை) குறைந்தபட்சம், பின்வரும் சிந்தனையாவது என் மனதில் ஓடாதிருக்கும் அளவு நான் மனிதத்தன்மைக்கு மேலானவனா யிருப்பேன்: "சதக் என்று ஒரே குத்து, எனது ஓடும் நாட்கள் யாவும் முடிந்து போகும்!"*

இருப்பினும், வேத வசனப்பகுதியானது, *"தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக் கொண்டதினிமித்தம்* அவன் மனது அடித்துக் கொண்டது" என்று கூறுகிறது. *தாவீது என்ன செய்யலாம் என்று நினைத்த தினிமித்தமாக அன்றி, அவர் என்ன செய்திருந்தார் என்பது பற்றியே அவர் மனது அடித்துக் கொண்டது. தாவீது மனத்துணிவுள்ளவராக இருந்தார் என்பதே அவரைப் பற்றிய என் மனப் பதிவாக உள்ளது; அவர் அபாயத்தின் மெய்சிலிர்ப்பை மகிழ்வுடன் அனுபவித்தார். தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்தெடுத்தார் என்பது, பள்ளி மாணவன் பிறர் கவனத்தைக் கவருவதற்காக ஏதாவது செய்வது போலவே, அரசரைச் சங்கடத்துக்கு உள்ளாக்குவதற்காக அதைச் செய்தார் என்பதே என் யூகமாக உள்ளது. இருப்பினும் அதைப் பற்றி அவர் நினைத்தபோது, அவரது மனச்சாட்சி யானது, "தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரை நீ சரீரரீதியாகத் துன்புறுத்தாமல் இருப்பதோடு கூட, நீ அவருக்கு ஒவ்வொரு வழியிலும் மரியாதை அளிக்கவும் வேண்டும்" என்று கூறிற்று.*

*இது நம்மை, நமது பாடத்தின் இந்தப் பகுதியில் நான் கூற விரும்பும் பிரதான கருத்திடம் கொண்டு வந்து சேர்க்கின்றது: தாவீது ஏன் சவுலைக் கொல்லவில்லை? அவர் (தாவீது) தம் மனிதர்களிடம் கூறியதை மீண்டும் கவனியுங்கள்: "கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன்மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாத படிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக; அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" (24:6). "கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்"*

என்ற சொற்றொடரை அடிக்கோடிட்டுக் கொள்ளவும். தாவீதைப் போலவே (அவருக்கு முன்னதாகவே) சவுலும் சாமுவேலினால் எண்ணெயைக் கொண்டு அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார் (இ.வ. 1 சாமு. 10:1; 16:13). "மேசியா" என்பது "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்பதற்கான எபிரெய வார்த்தையாக உள்ளது (இதற்கிணையான கிரேக்க வார்த்தையாக இருப்பது "கிறிஸ்து" என்பதாகும்). சவுல் *யாராக* (ஒரு பெலவீனமான, பகுத்தறிவற்ற, கீழ்ப்படிதல் இல்லாத மனிதராக) இருந்தார் என்பதற்காக அல்ல, ஆனால் அவர் *என்னவாக* "தேவனுடைய மேசியாவாக" இருந்தார் என்பதற்காகவே அவர் மதிக்கப்பட வேண்டும் என்று தாவீது அறிந்திருந்தார்.

இது வேதாகமம் முழுவதிலும் போதிக்கப்படுகின்ற பாடமாக உள்ளது. உங்களை இழுத்துச் செல்லுகிற காவலர் - அவர் யாராயிருக்கிறார் (உங்களைப் போலவே தவறு செய்யக் கூடிய மனிதராக இருக்கிறார்) என்பதற்காக அல்ல, ஆனால் - அவர் என்னவாக இருக்கிறார்: "உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான்" (ரோமர் 13:4) என்பதாலேயே மதிக்கப்பட வேண்டியவராக இருக்கின்றார். மூப்பர்கள், யாராயிருக்கின்றனர் (அசாதாரண வேலையைச் செய்ய முயற்சி செய்கின்ற சாதாரண மனிதர்கள்) என்பதற்காக அல்ல, ஆனால் அவர்கள் என்னவாக இருக்கின்றனர்: "தேவனுடைய சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த ..." (அப். 20:28) என்பதாலேயே அவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.[4]

தாவீது "ஆதார மூலத்தை ஆழ்ந்து சிந்தித்த" போது, அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவராயிருந்ததையும் அவர் (சவுல்) துன்புறுத்தப் படக் கூடாது என்பதையும் உணர்ந்தார்! தாவீது தமது உறுதிப்பாட்டில் எவ்வாறு இரண்டாவது மைல் தூரமும் சென்றார் என்பதைக் கவனியுங்கள்: "தன் மனுஷரைச் சவுலின்மேல் எழும்ப ஒட்டாமல், இவ்வார்த்தை களினால் அவர்களைத் தடை பண்ணினான்" (24:7). அது, தாவீது சவுலைக் கொல்லாமலிருந்த விஷயமாக மட்டும் இருக்கவில்லை; அவர் தம் மனிதர்களிடம் இராஜாவைக் கொல்லக் கூடாது என்று பேச வேண்டி யிருந்த விஷயமாகவும் இருந்தது. "தடை பண்ணினான்" என்பதற்கான எபிரெய வார்த்தையின் நேரடி அர்த்தமானது, தாவீது தமது வார்த்தை களினால் தமது மனிதர்களின் இருதயத்தைக் "கிழித்தார்" என்று சுட்டிக்காண்பிக்கின்றது (NASB யில் உள்ள அடிக்குறிப்பைக் கவனிக்கவும்). NIVயானது, தாவீது தமது மனிதர்களைக் "கடிந்து" கொண்டார் என்று கூறுகின்றது. குகையின் பின்பகுதியில் கடுமையான கிசுகிசுப்புக்களுடன் சூடான விவாதம் நடைபெற்றது. சவுலின் அடக்குமுறைச் சட்டங்களினால் சீரழிக்கப்பட்டிருந்த வாழ்வைக் கொண்ட அம்மனிதர்களுடன் தாவீது மிக அரிதாகவே எதிர்த்து நிற்க முடிந்தது.

ஒருவர் மீது பழிவாங்காதிருப்பது என்பது நீங்கள் எதிர்த்துத் தாக்காதிருப்பது என்று மட்டும் அர்த்தப்படுத்துவதில்லை; அந்த நபருக்குப் பிறர் துன்பம் தராதிருக்கும்படி நீங்கள் இணங்கச் செய்வது என்றும் அது அர்த்தப்படுத்துகின்றது. நான் பிரசங்கித்து வந்த ஒரு சபையில், நான்

ஊழியப் பணியை விட்டு விலக வேண்டியது அவசியம் என்று நான் நம்பினேன். நான் மனம் புண்படுத்தப்பட்டு இருந்தேன், ஆனால் குறைவான சிக்கலுடன், அமைதியாக வெளியேற வேண்டும் என்பதே எனது திட்டமாயிருந்தது. ஆயினும் சபையில் இருந்த பலர், எனது வெளியேறுதலில் மேலோட்டமாக இருந்ததைப் பார்க்கிலும் (உள்ளாக) ஏதோ பிரச்சனை இருந்ததாகச் சந்தேகப்பட்டார்கள், மற்றும் நான் தனிப்பட்ட ஆர்வங்களுக்கு மேலாக, "ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்காக" (எபே. 4:3), மற்றவர்களை (அது பற்றி) பிரச்சனை எழுப்ப வேண்டாம் என்று இணங்கச் செய்ய வேண்டிய நிலையில் இருந்தேன். நீங்கள் மனம் புண்படுத்தப்பட்டுள்ள வேளையில் இதைச் செய்வது என்பது மிகக் கடினமான விஷயம் என்று நான் கண்டறிந்தேன்! ஆயினும் இது பழி வாங்காதிருத்தலின் இன்றியமையாத பாகமாயிருக்கிறது.

தாவீது தமது மனிதர்களை இணங்கச் செய்து கொண்டிருக்கையில், சவுல் குகையை விட்டு வெளியே சென்றார். தாவீது (குகையின்) நுழை வாயிலுக்கு வந்து கவனித்தார். சவுல் சற்று தூரம் சென்றிருக்கையில், தாவீது வெளியே வந்து, ''ராஜாவாகிய என் ஆண்டவனே'' (24:8) என்று அழைத்தார்.

மத்தேயு 18ல் இயேசு, பிறருடனான நம் உறவுமுறைமைகளின் நித்திய கொள்கையொன்றை முன் வைத்தார்: ''உன் சகோதரன் உனக்கு விரோதமாக குற்றஞ் செய்தால்,[5] அவனிடத்தில் போய், ... அவன் குற்றத்தை உணர்த்து;[6] அவன் உனக்குச் செவி கொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்" (வ. 15). ஆலோசனை நிகழ்வுகளில் இது "எதிர்கொண்டு நிற்குதல்" என்று அழைக்கப்படுகிறது. இது உறவுமுறையை மீளக்கட்டியெழுப்புவதில் மிகவும் இன்றியமையாத பாகமாகக் கருதப்படுகிறது. இது, பாதிக்கப்பட்டவர் தமக்குள்ளாகப் பற்றியெரிந்து கொண்டிருக்கும் உணர்வுகள் குறித்து செயலாற்ற உதவுவதற்கும் அத்தியாவசியமானதாக உள்ளது. இந்த வேளை வரையிலும், தாவீது சவுலை எதிர்கொண்டு நிற்பதற்கு ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்க வில்லை. ஆயினும் கடைசியாக, அவரும் அவரைத் துன்புறுத்துபவரும் முகமுகமாய் (எதிர்கொண்டு) நின்றார்கள்.[7]

சவுல் திரும்பிய பொழுது, தாவீது தரைமட்டும் முகங் குனிந்து வணங்கி உணர்ச்சிமிக்கதொரு உரை நிகழ்த்தினார்:

> இதோ, கர்த்தர் இன்று கெபியில் உம்மை என் கையில் ஒப்புக் கொடுத்தார் என்பதை இன்றையதினம் உம்முடைய கண்கள் கண்டதே, உம்மைக் கொன்றுபோடவேண்டும் என்று, சிலர் சொன்னார்கள்; ஆனாலும் என் கை உம்மைத் தப்பவிட்டது; என் ஆண்டவன்மேல் என் கையைப் போடேன்; அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவராமே என்றேன். என் தகப்பனே பாரும்; என் கையிலிருக்கிற உம்முடைய சால்வையின் தொங்கலைப் பாரும்; உம்மைக் கொன்றுபோடாமல், உம்முடைய சால்வையின் தொங்கலை அறுத்துக்கொண்டேன்; என் கையிலே பொல்லாப்பும் துரோகமும் இல்லை என்றும், உமக்கு நான் குற்றம் செய்யவில்லை

*என்றும் அறிந்துகொள்ளும்; நீரோ என் பிராணனை வாங்க, அதை வேட்டையாடுகிறீர். கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம் விசாரித்து, கர்த்தர்தாமே என் காரியத்தில் உமக்கு நீதியைச் சரிக்கட்டுவாராக; உம்முடைய பேரில் நான் கைபோடுவதில்லை (24:10-12).*

*நீங்கள் இந்த உரை முழுவதையும் வாசிக்க விரும்புவீர்கள். இதில் குறிப்பிடத்தக்க பல எடுத்துரைப்புகள் உள்ளன. உங்களை மனம் புண்படச் செய்கின்றவர்களை எதிர்கொண்டு நிற்குதல் எவ்வாறு என்பது பற்றித் தாவீது ஒரு சிறு கருத்தரங்கை நடத்திக் கொண்டிருந்தார். தாவீது அற்பமானவராகவோ அல்லது அழகற்றவராகவோ இருக்கவில்லை, ஆனால் அவர் தாம் புண்படுத்தப்பட்டிருந்த உண்மையை மறைக்கவும் இல்லை. அவரது உரையானது கட்டுப்படுத்தப்பட்டதாகவும் மரியாதை நிறைந்த தாகவும் இருந்தது; அவர் ராஜாவை "என் ஆண்டவனே", "கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர்", "என் தகப்பனே"[8] என்று அழைத்தார். அவர் தம்மை ஒரு "செத்த நாய்" என்றும் "தெள்ளுப் பூச்சி" என்றும் குறிப்பிட்டார். அவர் சவுலின் செயல்களின் மீது சாத்தியமான வகையில் மிகச் சிறந்த கட்டுமானத்தை இட்டார்; சவுலின் நோக்கங்களை நியாயந் தீர்ப்பதற்குப் பதிலாக, அந்த ராஜா மோசமான ஆலோசனைகளுக்குச் செவி சாய்த்திருந்ததாக அவர் (தாவீது) கூறினார் (24:9). சவுல் நியாயமற்றவராக இருந்த போதிலும், தாவீது அவரிடம் நியாயமாக நடந்துகொண்டு, தாம் ராஜாவுக்குத் துன்பம் விளைவிக்கவில்லை என்பதற்கு ஆதாரத்தை அளித்தார்.*

*இருப்பினும், தாவீது "ஆதார மூலத்தை ஆழ்ந்து சிந்திக்கத்" தொடர்ந்த பொழுது, அங்கு நேரிட்ட நிறைவான ஆதார மூலம் தேவனே என்பதைக் கண்டார் என்று நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். 24:10ல் தாவீதின் வார்த்தைகளைக் கவனியுங்கள்: "கர்த்தர் இன்று கெபியில் உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்தார்." தேவன் சவுலைத் தாவீதின் கையில் ஒப்புக்கொடுத்தார். எனவே தாவீது அவரைக் கொல்லலாம் என்று தாவீதின் மனிதர்கள் அவருக்கு ஆலோசனை அளித்தார்கள். இருப்பினும் தாவீது, சவுலைத் தப்புவிக்கவும், தாம் சவுலின் விரோதியல்ல என்பதை அவருக்கு நிரூபிக்கவுமே தேவன் அவரைத் தமது கையில் ஒப்புவித்தார் என்று கண்டார்.*

*யாரேனும் உங்களைப் புண்படுத்துகின்ற பொழுது, மற்றும் நீங்கள் "ஆதாரமூலத்தை ஆழ்ந்து சிந்திக்கின்ற" பொழுது, அந்த சூழ்நிலையில் தேவன் உங்களை மிகப் பெரிய மற்றும் மிகச் சிறந்த நபராக்குவதற்காகச் செயல்படுகின்றார் என்ற சாத்தியக் கூற்றை தள்ளி விடாதீர்கள் (மத். 5:10-12ஐக் கவனிக்கவும்).*

*தாவீதின் எண்ணப்போக்கு சவுலின் இதயத்தில் (உணர்வுப்பூர்வமாகப்) பதிந்தது என்பது தெளிவு.*

*சவுல்: "என் குமாரனாகிய தாவீதே, இது உன்னுடைய சத்தமல்லவா" என்று சொல்லி, சத்தமிட்டு அழுது, தாவீதைப் பார்த்து: "நீ என்னைப்*

*பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; நானோ உனக்குத் தீமை செய்தேன் ... நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் இராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன்" (24:16, 17, 20).*

*இது, தாவீது அடுத்த ராஜாவாவார் என்று சவுல் வெளிப்படையாக ஒப்புக் கொண்ட முதல் தடவையாக இருந்தது.*

*இது, அவர்கள் ஒப்புரவாகியது போன்று ஒலிக்கிறது, இல்லையா? இது தாவீதிற்கு, தலைநகருக்குத் திரும்பி, ராஜாவின் அரண்மனையில் தமது இடத்தை மீண்டும் மேற்கொள்வதற்கான ஒரு குறிப்பாக இருந்திருக்க வேண்டும். ஆயினும் தாவீது, தாம் சிறிது அவகாசத்தை வாங்கியிருந் திருக்கையில், திடபுத்தியற்ற அந்த முடியரசரை நம்ப முடியாது என்று அறிந்தார். இந்த அத்தியாயம் பின்வரும் வார்த்தைகளுடன் முடிகின்றது: "பின்பு, சவுல் தன் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனான்; தாவீதும் அவன் மனுஷரும் அரணிப்பான இடத்திற்கு ஏறிப் போனார்கள்" (24:22ஆ); அவர்கள் தாங்கள் பாதுகாப்பாயிருந்த இடங்களில் தங்கியிருந்தார்கள்.*

## விலையை எண்ணுங்கள்
## *(1 சாமுவேல் 25)*

*அத்தியாயம் 25 ஒரு புதிரைப் போன்றுள்ளது. அத்தியாயங்கள் 24 மற்றும் 26 ஆகியவை, தாவீது சவுலைக் கொன்றிருக்கக் கூடிய, ஆனால் அவ்வாறு செய்யாமல் விட்டுவிட்ட இரு நிகழ்ச்சிகளைக் கூறுகின்றன. இந்த இரு அத்தியாயங்களுக்கிடையில் செருகப்பட்ட நிலையில் உள்ள 25ம் அத்தியாயம் ஒரு கணவன் மற்றும் அவனது மனைவி (நாபால் மற்றும் அபிகாயில், இவர்கள் தாவீதுடன் செயல்பட்ட விதம் ஆகியவை) பற்றிக் கூறுகின்றது. ஒரே விதமான நிகழ்வுகளைக் கூறுகின்ற 24, 26ம் அத்தியாயங் களுக்கிடையில் இந்த 25ம் அத்தியாயம் வைக்கப்பட்டிருக்கக் காரணம் என்ன? இது நாள் வரிசைக் கணக்கின்படி அவ்விரு நிகழ்வுகளுக்கிடையில் நடைபெற்றதால் இங்கு வைக்கப்பட்டதென்று நாம் கூற முடியும். இருப்பினும், வரலாற்றாளர்களும் மனிதர்களின் வாழ்வு பற்றி எழுதுகின்ற வர்களும் தங்கள் பாடக்கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுபவர்களா யிருந்திருக்க வேண்டும்.[9] சில நிகழ்வுகள் ஏன் அவை உள்ள இடங்களில் வைக்கப்பட்டுள்ளன என்பதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன.*

*அத்தியாயம் 25, அத்தியாயங்கள் 24 மற்றும் 26 ஆகியவற்றிற்கிடையே வைக்கப்பட்டதற்கு (1) பழிவாங்குதலைப் பற்றிய தாவீதின் இயல்பான சாயுந்தன்மையைக் காண்பிக்கவும், (2) ஒருவர் தம் சொந்தக் கைகளினால் பழிவாங்குதல் பற்றித் தேவன் கருதுவதென்ன என்பதை அவர் (தாவீது) கற்றுக் கொள்வதைக் காண்பிக்கவும் என்ற இரு காரணங்கள் இருந்ததாக நான் நம்புகின்றேன்.*

*அத்தியாயம் 25ன் முதல் வசனம், சாமுவேலின் மரணம் பற்றியும், தாவீதும் அவர் மனிதர்களும் பாரான் வனாந்தரத்திற்குச் சென்ற உண்மை*

*பற்றியும் கூறுகின்றது. வனாந்தரத்தில் தாவீது ஆறு மனிதர்களுக்குக் கூட உணவளிக்க முடியாது, அவர் அங்கு அறுநூறு பேர்களுக்கு மிகமிகக் குறைவாகவே உணவளித்திருக்கக் கூடும். ஆகையால் தாவீது பாதுகாக்கும் பணியை மேற்கொள்ளச் சென்றார். அவரும் அவரது மனிதர்களும் வெளியில் மேய்ந்து கொண்டிருந்த மந்தைகளைப் பாதுகாத்தார்கள் (25:7, 8, 15, 16). "தாவீது பாதுகாக்கும் பணியை மேற்கொள்ளச் சென்றார்" என்று நான் கூறியதைக் கவனிக்கவும் (சில விளக்கவுரையாளர்கள் கூறுவது போல) அவர் "பாதுகாக்கும் தாதா" வாக இருந்தார் என்று நான் கூறுவதில்லை. "பாதுகாக்கும் தாதா" என்பது, அந்தக் கும்பல் வருமுன்பு பாதுகாப்பு அவசியப்பட்டிராத மக்களுக்குப் "பாதுகாப்பு" அளிப்பதாகக் கூறிக் கொள்ளும் கும்பல் என்பதைக் குறிக்கின்றது. இதற்கு நேரெதிராக, பாரான் வனாந்தரத்தில் உண்மையாகவே பாதுகாப்பிற்கான அவசியம் ஏற்பட்டு இருந்தது. அங்கு வேலிகள் இல்லை; காட்டு விலங்குகளும் முரட்டுத் தனமான (மலை ஜாதி) இனத்தவர்களும் நிறைந்திருந்தன(ர்); மற்றும் வழிதப்பித் திரியும் ஆட்டுக்குட்டிகள் அல்லது சிறு ஆடுகள் எப்பொழுதுமே நல்ல வேட்டைப் பொருளாய் இருந்தன.*

*தாவீதின் மனிதர்களால் இவ்வாறு காக்கப்பட்டிருந்த மந்தைகள் ஒன்றின் உரிமையாளனாக இருந்த நாபால் என்ற பெயர் கொண்ட ஒரு மனிதன் மிகுந்த செல்வந்தனாக இருந்தான்: "மாகோனிலே ஒரு மனுஷன் இருந்தான்; அவனுடைய தொழில்துறை கர்மேலில்[10] இருந்தது; அந்த மனுஷன் மகாபாரிக் குடித்தனக்காரனாயிருந்தான்,[11] அவனுக்கு மூவாயிரம் ஆடும், ஆயிரம் வெள்ளாடும் இருந்தது" (25:2). இருப்பினும் அவன் அயலகத்தாராக (நீங்கள் அல்லது யாரும்) இருக்க விரும்பாத மனிதனாயிருந்தான். "அந்தப் புருஷனோ முரடனும் துராகிருதனுமாயிருந்தான்" (25:3).[12] அவனது வேலைக்காரன் அவனைப் பற்றி, "இவரோ, ஒருவரும் தம்மோடே பேசக் கூடாத பேலியாளின் மகனாயிருக்கிறார்"[13] (25:17) என்று கூறினான். அவன் மதுப்பழக்கம் என்ற பிரச்சனையும் கொண்டிருந்தான் (25:36).*

*அவன் பெயர் நாபால் என்பதாகும், இது "முட்டாள்" அல்லது "முட்டாள் தனமான" என்ற நேரடி அர்த்தம் தருகின்றது. ஒரு தாய் தனது பிள்ளைக்கு "முட்டாள்" என்று பெயரிடுதலைக் கற்பனை செய்து பார்த்தல் கடினமானதாக உள்ளது.[14] ஒருவேளை இது அவன் பிறந்தபோது இடப்பட்ட பெயரின் திரிபாக இருக்கலாம்; ஒருவேளை இது கேலிக்காக இடப்பட்ட பெயராயிருக்கலாம். இருப்பினும், அவன் இந்தப் பெயருடன் வந்தான், இது அவனுடன் ஒட்டிக் கொண்டது. ஒவ்வொருவரும், அவன் மனைவியும் கூட (25:25) அவனை இந்தப் பெயரினாலேயே அழைத்தார்கள். இது அவனது குணத்தைச் சரியாகவே தொகுத்துரைத்தது.*

*அத்தியாயம் 25ன் நாடகத்தில், நாபாலின் மனைவியான அபிகாயில் என்னும் பெயர் கொண்ட ஒரு பெண் இன்னொரு முக்கிய கதாபாத்திரமாக இருக்கிறாள். அவளது பெயர், "அவள் தகப்பனின் மகிழ்ச்சி" என்று அர்த்தப்படுகிறது. வசனம் 3, "அந்த ஸ்திரீ மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்தாள்" என்று கூறுகிறது. என்ன ஒரு அற்புதமான இணைவு!*

*வேதாகமத்தில் நான்கு பெண்கள் "அழகானவள்" என்று அழைக்கப் படுகின்றனர்,[15] அவர்களில் ஒருத்தி இந்த அபிகாயில் ஆவாள்.*

*அழகும் அறிவும் கொண்ட இந்தப் பெண் எப்படி இந்த மதியீனமான மனிதனுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டாள்? அபிகாயில் இதைக் குறித்து ஒன்றும் கூறமுடியாதிருந்தது என்பதே இதற்குக் காரணமாயிருந்தது, திருமணங்கள் (பெற்றோர்களால்) ஏற்பாடு செய்யப்பட்டன. அபிகாயிலின் பெற்றோர் செல்வந்தனாயிருந்த நாபாலை ஒரு சிறந்த மாப்பிள்ளையாகக் கருதியிருக்கலாம். அபிகாயில் அழகு மிக்கவளாய் இருந்தபடியால், அவளைத் திருமணம் செய்து கொள்ள நாபால் சம்மதித்தான். இவ்விதமாக, அழகும் மிருகமும் திருமணத்தில் இணைந்தன(ர்) - ஆனால் அவர்கள் "அதன் பின் என்றென்றும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருக்க" வில்லை. அபிகாயிலுக்கு நேர்த்தியான உடைகளும், பயணம் செய்ய மிகச் சிறந்த சாரட் வண்டிகளும் இருந்தன, அவர்கள் மிகவும் ஆடம்பரமான விருந்துகளைக் கொடுக்க முடிந்தது - ஆனால் அவள் ஒரு அற்பத்தனமான, வெறுக்கத்தக்க ஒரு குடிகாரனான முட்டாளை திருமணம் செய்திருந்தாள் என்ற உண்மை அப்படியே நிலைத்து நின்றது.*

*இந்த அத்தியாயம் தொடங்குகையில், அது ஆடுகளுக்கு மயிர் கத்தரித்தல் (25:2) என்ற பண்டிகை நிகழ்ச்சி நடக்கும் வேளையாயிருந்தது. ஆட்டு மயிரைக் கத்தரித்தல் என்ற நிகழ்ச்சி, மந்தையைப் பாதுகாத்தவர்கள் உட்பட, ஆட்டுமயிர் என்ற விளைவை சாத்தியமாக்கியவர்களுக்கு மதிப்பை வெளிப்படுத்தும் வேளையாயிருந்தது. நாபால் தனது ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்கும் செய்தியைத் தாவீது கேள்விப்பட்ட பொழுது, அவர் பத்து இளைஞர்களை, செல்வந்தனான அந்த உரிமையாளனிடம் அனுப்பி வைத்தார். அவனிடத்தில் பின்வருமாறு கூறும்படி தாவீது அவர்களிடம் கூறியிருந்தார்:*

> *நீர் வாழ்க, உமக்குச் சமாதானமும், உம்முடைய வீட்டுக்குச் சமாதானமும், உமக்கு உண்டான எல்லாவற்றிற்கும் சமாதானமும் உண்டாவதாக என்று அவனை வாழ்த்தி, இப்பொழுது, ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்கள் உம்மிடத்தில் இருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டேன்; உம்முடைய மேய்ப்பர் எங்களோடேகூட இருந்தார்கள்; அவர்கள் கர்மேலில் இருந்த நாளெல்லாம் நாங்கள் அவர்களை வருத்தப்படுத்தவில்லை, அவர்களுடைய பொருள் ஒன்றும் காணாமற் போனதும் இல்லை. உம்முடைய வேலைக்காரரைக் கேளும்; அவர்கள் உமக்குச் சொல்லுவார்கள், ஆதலால் இந்த வாலிபருக்கு உம்முடைய கண்களிலே தயை கிடைக்க வேண்டும். நல்ல நாளில் வந்தோம், உம்முடைய கைக்கு உதவுவதை உம்முடைய ஊழியக்காரருக்கும், உம்முடைய குமாரனாகிய தாவீதுக்கும் கொடுக்கும்படி வேண்டு கிறேன் என்று சொல்லுங்கள் என்றான் (25:6-8).*

*தாவீதின் இளைஞர்கள் நாபாலிடம் சென்று, இந்த வார்த்தைகளை அப்படியே அவனிடம் கூறி, "பின்னொன்றும் பேசாதிருந்தார்கள்" (25:9). அவர்கள், உங்கள் பயணச் சுமைகளை உங்களின் அறைக்குச் சுமந்து வந்த*

பின் நின்றுகொண்டு கை நீட்டிக் காத்திருக்கும் ஏவலாள் போன்று காத்திருந்தார்கள். தாவீதிற்கும் நாபாலுக்கும் எவ்விதத் தொடர்பும் இருந்ததில்லை, அல்லது இவன் (நாபால்) அவர்களுக்கு எதையேனும் தர வேண்டும் என்று எழுதப்பட்ட ஒப்பந்தம் எதுவும் இருந்ததில்லை - நீங்கள் சிறு அன்பளிப்புத் தர வேண்டும் என்று எழுதப்பட்ட சட்டம் ஒன்றும் இல்லாதிருப்பது போலவே இதுவும் இருந்தது. இருப்பினும், இப்பொழுது போலவே அப்பொழுதும், நீங்கள் ஒரு விசேஷித்த கவனிப்பைப் பெற்றால், நீங்கள் உங்கள் மதிப்புணர்வைக் காண்பிக்க வேண்டும் என்பது புரிந்து கொள்ளப்பட்டதாக இருந்தது. தாவீதுக்கும் அவரது மனிதர்களுக்கும் நாபால் எதைக் கொடுக்கவும் அவர்கள் தகுதியானவர்களே என்பது எல்லா வகையிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்டது. பிற்பாடு மேய்ப்பர்கள் அபிகாயிலிடம் பின்வருமாறு கூறினார்கள்:

> அந்த மனுஷரோ எங்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்கள்; நாங்கள் வெளிகளில் இருக்கும்போது, அவர்கள் எங்களிடத்தில் நடமாடின நாளெல்லாம் அவர்கள் எங்களை வருத்தப்படுத்தினது மில்லை; நமது பொருளில் ஒன்றும் காணாமற்போனதுமில்லை. நாங்கள் ஆடுகளை மேய்த்து, அவர்களிடத்தில் இருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதிலாயிருந்தார்கள் (25:15, 16).

பின்பு தாவீதின் வேலைக்காரர்கள் தங்கள் வெகுமதிக்காகக் காத்திருந்தார்கள்.

இருப்பினும் நாபால் முட்டாள்தனமாக நடந்து கொண்டு (நீதி. 15:2; 18:6, 7; 29:11 முதலியன), அவர்களை அவமானப்படுத்தத் தொடங்கினான்:

> தாவீது என்பவன் யார்? ஈசாயின் குமாரன் யார்? தங்கள் எஜமான் களை விட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் இந்நாளில் அநேகர் உண்டு. நான் என் அப்பத்தையும், என் தண்ணீரையும், என் ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்களுக்காக நான் அடித்துச் சமையல் பண்ணு வித்ததையும் எடுத்து, இன்ன இடத்தார் என்று நான் அறியாத மனுஷ ருக்குக் கொடுப்பேனோ என்றான் (25:10, 11).

நாபால், தான் தாவீதைப் பற்றி ஒருக்காலும் கேள்விப்பட்டதில்லை என்று உரிமைகோரினான், மற்றும் அவன், தாவீது (தனக்குச்) செய்திருந்த சேவை பற்றி அறிந்திருந்தது இல்லை என்று மறைமுகமாக உணர்த்தினான். (“எனக்குத் தெரிந்த மட்டும் அவன் ஓடிப்போன ஒரு அடிமையாய் இருக்கக் கூடும்.’’) ஆயினும் அபிகாயில், தாவீது யார் என்பதை மிகச்சரியாக அறிந்திருந்தாள் (இ.வ. 25:28, 30), அவளது கணவனும் அதைப் பற்றி அறிந்திருக்க வாய்ப்பு உண்டு. நாபாலின் மேய்ப்பர்கள் பருவ காலத்தில் சிலவேளைகளில் அவனிடத்தில் திரும்பி வந்து, தங்களைப் பாதுகாத்திருந்த (தாவீதின்) மனிதர்களைப் பற்றி நாபாலிடம் நிச்சயமாகக் கூறியிருப் பார்கள். இங்கு, நாபால் தாவீது யார் என்று அறியாதிருந்தான் என்பது பிரச்சனையல்ல; ஆனால் அவன் தான் கொண்டிருந்த பொருட்கள்

*எல்லாவற்றின் மீதும் மரணத்திற்கேதுவான விருப்பபற்றுக் கொண்டவனா யிருந்து ஒரு பேராசைக்காரனாயிருந்தான் என்பதுதான் பிரச்சனையாக இருந்தது.*

*செய்தியாளர்கள் தாவீதிடம் திரும்பி வந்தார்கள். வாயிற்காவலன் பின்வருமாறு சத்தமிட்டிருப்பான் என்று என்னால் கற்பனை செய்ய முடிகிறது: "மனிதர்கள் திரும்பி வருகின்றார்கள்!" பசியுடன் இருந்த தாவீது அவர்கள் வருவதற்காக ஆவலுடன் காத்திருந்தார். அவர் ஒரு கொழுத்த ஆட்டுக்குட்டியை வறுக்கத் தயாராயிருந்த நெருப்புடன் அங்கிருந்தார். அவரது வாய் ஏற்கனவே உமிழ்நீரைச் சுரக்கத் தொடங்கியிருந்தது. ஆயினும், அவர்கள் திரும்பி வந்தபோது, வெறுங்கையர்களாய் வந்தார்கள். தாவீது ''என்ன நடந்தது?'' என்று கேட்டார். தாவீதுக்கு அவர்கள் [நடந்ததைக்] கூறியபோது, அவர் கோபமாய் இருந்தார். அவர் தமது மனிதர்களிடம், "உங்கள் பட்டயங்களை எடுத்துக் கட்டிக் கொள்ளுங்கள்!" என்று சத்தமிட்டார்.*

> *''அவனுக்கு வனாந்தரத்தில் இருக்கிறதையெல்லாம் வீணாகவே காப்பாற்றினேன்; அவனுக்கு உண்டானதிலெல்லாம் ஒன்றும் காணாமற்போனதில்லை; என்றாலும் நன்மைக்குப் பதிலாக அவன் எனக்குத் தீமைசெய்தான். அவனுக்கு உண்டான எல்லாவற்றிலும் சுவரில் நீர்விடும் ஒரு நாயை[16] முதலாய்ப் பொழுதுவிடியுமட்டும் நான் உயிரோடே வைத்தால், தேவன் தாவீதின் சத்துருக்களுக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர் என்று சொல்லியிருந்தான்" (25:21, 22).*

*விரைவிலேயே தா வீதின் முகம் அவரது முடியைப் போன்றே சிவப்பானது, அவர் ஆயுதம் தரித்த நானூறு மனிதர்களுடன் நாபாலின் குடியிருப்பை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்!*

*நாபால் எந்த ஒரு சட்டத்தையும் மீறவில்லை அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் முறிக்கவில்லை என்பதை நினைவில் வையுங்கள். அவன் தாவீதின் உயிருக்கு அபாயம் விளைவிக்கவோ அல்லது அவரைப் பயமுறுத்தவோ கிடையாது. அவன் செய்ததெல்லாம், (1) தாவீதை அவமானப்படுத்தினான் மற்றும் (2) தாவீதின் சேவைகளுக்கு மதிப்பளிக்கா திருந்தான் என்பது மட்டுமே. ஒரு வேலையாளுக்குச் சிறு அன்பளிப்பு ஒன்றை நீங்கள் வழங்காமல் செல்வதினால் அவ்வேலையாள் தம் கையில் ஒரு துப்பாக்கியுடன் உங்களை, கார் நிறுத்துமிடத்திற்குப் பின் தொடர்ந்து வருவதை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? (நான் போதிய அளவு சிறு அன்பளிப்புத் தரவில்லை என்று நினைத்த சில மக்கள் என்னை அவமானப் படுத்திய சில வேளைகளைச் சந்தித்திருக்கிறேன், ஆனால் அவர்களில் எவரும் என்னைக் கொன்று விட முயற்சி செய்ததில்லை!) நீங்கள் எந்த வகையில் பார்த்தாலும், தாவீது மிகையாகவே செயல்பட்டார். நாபாலைக் கொல்ல நானூறு மனிதர்கள் (அவர்களுடன் கூடுதலாகத் தாவீதும்) சென்றார்கள் - இது ஒரு கரப்பான் பூச்சியைக் கொல்லச் துப்பாக்கியை எடுத்துச் செல்வது போன்றதாக இருந்தது! நாபால் மரண தண்டனைக்குரிய*

குற்றம் எதுவும் செய்யாதிருந்தபடியினால், தாவீது திட்டம் இட்டிருந்து ஒரு கொலை என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்: இது முன்பே நன்கு சிந்திக்கப்பட்ட கொலையாக, முதல் அளவான கொலையாக இருந்தது.

இந்த இடத்தில் பல விளக்கவுரையாளர்கள் தங்கள் தலைகளை அசைக்கின்றார்கள். "இது நம்ப முடியாததாக உள்ளது! தாவீதைக் கொல்லத் தமது வாழ்வையே அர்ப்பணித்திருந்த (சவுல்) ராஜாவின் உயிரைக் காப்பாற்றியிருந்த ஒரு நபர் (தாவீது), இப்பொழுது (நன்றி!) என்று கூறத் தவறியதற்காக ஒன்றுமில்லாத ஒருவரைக் கொல்லத் திட்டமிட்டார்! தாவீதின் நபர்த்துவத்தில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை எவ்வாறு ஒருவர் சாத்தியமான வகையில் விளக்கியுரைக்க முடியும்?" இங்கு நபர்த்தன்மையில் மாற்றம் ஏற்பட்டதாக நான் நினைக்கவில்லை. அத்தியாயம் 25ல் நாம் தாவீதின் இயல்பு நிலையான பதில்செயலைக் காண்கிறோம் என்றே நான் நினைக்கிறேன். அவர், சவுல் அபிஷேகம் செய்யப்படாதவராக இராதிருந்தால், சவுலுக்கு என்ன செய்ய விரும்பியிருப்பார்,[17] அவருக்குத் தாவீது என்ன செய்திருப்பார் என்பதையே நாம் காண்கின்றோம் என்று நான் நினைக்கின்றேன். மற்றும், அவர் தம்மால் தாங்கிக் கொள்ள முடிந்ததை யெல்லாம் தாங்கிக் கொண்டிருந்தார், நாபாலின் வார்த்தைகள் பழமொழிப் படியான கடைசி வைக்கோலாயிருந்தன என்றும் நான் நினைக்கின்றேன். அவர், "நான் சவுலிடத்தில் இருந்து மோசமாக நடப்பிக்கப்படுதலை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்து, ஆனால் அப்படிப்பட்ட காரியத்தை நான் இந்தப் 'பேலியாளின் மகனிடத்தில்' இருந்து ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை" என்று நினைத்திருக்க வாய்ப்பு உண்டு!

பழிவாங்குதல் பற்றித் தாவீது - தேவனால் அபிஷேகம் பண்ணப் பட்டவரை ஒருவர் பழிவாங்கக் கூடாது என்ற - ஒரு திட்டவட்டமான பாடத்தைக் கற்றிருந்தாலும் கூட, எந்த நபராயிருப்பினும் அவரை பழிவாங்குதல் என்பதை ஒருவர் தமது சொந்தக் கைகளில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற பொதுவான பாடத்தை அவர் கற்றிருக்கவில்லை.

அந்தக் கொலைச் செயலுக்காகத் தாவீது தம் மனிதர்களைத் தயாரித்துக் கொண்டிருந்த வேளையில், நாபாலின் வேலைக்காரர்களில் ஒருவர் தாவீதின் திட்டம் பற்றி அபிகாயிலுக்கு வார்த்தை கொண்டு வந்தார். எந்தப் பெண்ணும் தேர்ந்தெடுக்க விரும்பாத ஒரு திருமண வாழ்வில் அபிகாயில் ஒட்டி நிலைத்திருந்தாள் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அவள் பரிதபிக்கப்படத்தக்க ஒரு முட்டாள் கணவனுடனான வாழ்க்கை என்பதைத் தவிர வேறொன்றையும் எதிர்நோக்கக் கூடாதவளாயிருந்தாள். தாவீது நானூறு மனிதர்களுடன் புறப்பட்டு வருவதை அவள் அறிந்தபோது, கண்களைச் சிமிட்டி, ஒரு சிறு புன்முறுவலுடன், "நான் என் அறைக்குச் சென்று எனது கணவருக்காக ஜெபிப்பேன்'' என்று கூறுவதென்பது அவளுக்கு சுலபமானதாக இருந்திருக்கும்.[18] முப்பது நிமிடங்கள் அல்லது ஒரு மணி நேரங் கழிந்த பின் அவள் அங்கிருந்து திரும்பி வருகையில் எல்லாம் முடிந்து போயிருக்கும். ஒரு சில நாட்களுக்கு அவள் கருப்பு உடை அணிந்து கொண்டிருந்து விட்டு, அந்தப் பகுதியில் செல்வந்தமிக்க விதவையாக இருப்பதை மகிழ்வுடன் அனுபவித்திருக்க முடியும் -

*எவரொருவரும் அவளைக் குற்றம் கூறியிருக்க மாட்டார்கள்!*

*இருப்பினும், அவள் அவ்வகையில் பதில்செயல் செய்யவில்லை. மாறாக, அவள் தனது கணவனின் உயிரைக் காப்பதற்கு விரைவாக ஒரு திட்டத்தைக் கண்டறிந்து செயல்படுத்தினாள். அந்தத் திட்டம் அவள் தன் சொந்த உயிரை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்குவதாக இருந்தது, ஆனால் அதைச் செய்வதற்கு அவள் மனப்பூர்வமாகச் சம்மதித்தாள். ஏன்? ஏனென்றால், அவள் நாபாலைத் திருமணம் செய்து கொண்ட வேளையில், தேவனிடத்தில் ஒரு உறுதிப்பாட்டைச் செய்திருந்தாள் (இ.வ. மல்கி. 2:14; மத். 19:6). அவன் கொடூரமானவனாக, அவன் திட்டுபவனாக, அவன் எதிர்த்து நிற்பவனாக இருக்கலாம், ஆனால் அவன் அவளுக்குக் கணவனாயிருந்தான் - அவள் அவனைத் தன் வாழ்வு முழுவதற்குமாகத் திருமணம் செய்து கொண்டிருந்தாள்! திருமணத்தைத் தூக்கியெறிந்து விடுகின்ற இந்த நாட்களில், நமக்கு அபிகாயிலின் எண்ணப்போக்கு எவ்வளவாகத் தேவைப்படுகின்றது! "தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்" என்று தேவன் இன்னமும் கூறுகின்றார் (மல்கி. 2:16), மற்றும் இயேசு இன்னமும், "தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கட்டும்" என்று கூறுகின்றார் (மத். 19:6).*

*அபிகாயில் தனது திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தினாள். அவள் தனது சமையலறையையும் பொருள் வைப்பறையையும் ஊடுருவி, பசிகொண்ட நானூற்றியோரு மனிதர்கள் விரும்பக் கூடியவற்றை எல்லாம் எடுத்துக் கொண்டாள். அவை யாவற்றையும் அவள், கழுதைகளின் மேல் ஏற்றிக் கொண்டு, தாவீதைக் காணச் சென்றாள் - தங்கள் இருதயங்களில் கொலை வெறியுடன் இருந்த நானூறு ஆண்களை முகமுகமாய்ச் சந்திக்க தனியொரு பெண்ணாக அவள் சென்றாள்.*[19]

*அவள் ஒரு பள்ளத்தாக்கில் தாவீது மற்றும் அவரது மனிதர்களை இடைமறித்தாள். அவள் தன் கழுதையிலிருந்து உடனடியாக இறங்கி, தாவீதின் படையினர் வந்த பாதையில் முகங்குப்புற விழுந்தாள். திகைப்புற்ற தாவீது, தங்கள் கால்களை உதைத்துக் கொண்டு தங்கள் கொலைவெறியிலிருந்து மீள்வதற்குப் பொறுமையற்றவர்களாய்த் தம்மைச் சுற்றியிருந்த, தமது மனிதர்களைத் தம் கைகளினால் நிறுத்தியதை என்னால் கற்பனை செய்து காண முடிகின்றது. அபிகாயில், தாவீதின் முன்பாக மண்டியிட்ட நிலையில், வேத வசனங்களில் காணப்படுகின்ற சொல்லாற்றல் மிக்க வேண்டுகோள்களில் ஒன்றை உரையாற்றினாள். (இது அவள் தன் கணவனுக்காக மன்னிப்பு வேண்டுகின்ற முதல் தருணமாயிருந்திருக்காது என்பதில் நான் சந்தேகப்படுகின்றேன்; அநேகமாக அவள் இந்த உரையின் மாறுபட்ட வடிவங்களை [இதற்கு முன்] ஒருமுறைக்கும் அதிகமாகப் பயன்படுத்தியிருந்திருப்பாள்!)*

*அபிகாயிலின் உரையில், அவள் தவறான புரிந்துகொள்ளுதலுக்கான முழுப் பொறுப்பையும் தானே ஏற்றுக் கொண்டாள் (25:24; 25:28ஐயும் காணவும்). இது தாவீதிற்கு குழப்பமூட்டுவதாக இருந்தது. நாபால் போன்ற முட்டாள்களைக் கொல்லுவது ஒரு விஷயமாயிருந்தால், அழகு மிகுந்த ஒரு பெண்ணை கொல்லுதல் என்பது முற்றிலும் வேறொரு விஷயமாயிருந்தது.*[20]

*அவள் தான் கொண்டு வந்திருந்த வெகுமதிகளை ஏற்றுக் கொள்ளும்படி தாவீதை வற்புறுத்தினாள் (25:27). இந்த உரை முழுவதிலும், அவள் மாபெரும் மரியாதையைக் காண்பித்தாள். (அவள் தாவீதைப் பன்னி ரெண்டுமுறை "என் ஆண்டவனே" என்று கூறினாள், ஆறுமுறை தன்னை "உமது அடியாள்" என்று குறிப்பிட்டாள்!) தேவன் தாவீதுடன் இருப்பார் என்ற தனது நம்பிக்கையை அவள் வெளிப்படுத்தினாள் (25:28-31).[21] இன்னொருவரின் கோபத்தைத் தணிக்க விரும்புகின்ற எவரொருவருக்கும் இந்த உரையானது ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.*

*இந்த கசப்பான மனிதர் செய்யத் திட்டமிட்டு இருந்தவற்றின் விளைவுகளை ஆழ்ந்து சிந்திக்கும்படி செய்ததுதான், அவரை(தாவீதை)த் தாமதிக்கச் செய்ததில் அபிகாயில் நிறைவேற்றிய முக்கியமான விஷயமாக இருந்தது.*

> *"இப்போதும் என் ஆண்டவனே, நீர் இரத்தம் சிந்த வரவும், உம்முடைய கை நீதியைச் சரிக்கட்டவும், கர்த்தர் உமக்கு இடங் கொடுக்கவில்லை என்பதைக் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டும், உம்முடைய ஜீவனைக்கொண்டும் சொல்லுகிறேன்; இப்போதும் உம்முடைய சத்துருக்களும், என் ஆண்டவனுக்கு விரோதமாகப் பொல்லாப்புத் தேடுகிறவர்களும், நாபாலைப்போல ஆகக்கடவர்கள் ... கர்த்தர் ... இஸ்ரவேலுக்கு அதிபதியாக உம்மை நேமிக்கும்போது[22] நீர் விருதாவாய் இரத்தம் சிந்தாமலும், என் ஆண்டவனாகிய நீர் பழிவாங்காமலும் இருந்ததுண்டானால், அப்பொழுது என் ஆண்டவனாகிய உமக்குத் துக்கமும் இராது, மன இடறலும் இராது ... (25:26, 30, 31).*

*அபிகாயில், "தேவன் உம்மை ராஜாவாக்குவார், அது நடக்கும்போது நீர் காரணமின்றி சென்று மக்களைக் கொன்றீர், நீதியை உமது சொந்தக் கைகளில் எடுத்துக் கொண்டீர் என்று உம்மைப் பற்றிய பதிவேடுகளில் எழுதப்படுவதையும் மற்றும் உம் மனச்சாட்சியில் இருப்பதையும் நீர் விரும்பமாட்டீர் (அல்லவா?)" என்று கூறினாள்.*

*தாவீது, "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதர்" என்று அழைக்கப் படுவதற்கான ஒரு காரணத்தை (இவ்விடத்தில்) அவரது பதில்செயலானது காண்பித்தது. அவர் போதிக்கப்படக் கூடிய ஒரு ஆவியைக் கொண்டிருந் தார்; அவர் அடையக் கூடிய ஒரு ஆவியைக் கொண்டிருந்தார்.[23] அவர், "உன்னை இன்றையதினம் என்னைச் சந்திக்க அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நீ சொல்லிய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக; நான் இரத்தம் சிந்த வராதபடிக்கும், என் கையே பழி வாங்காதபடிக்கும், நீ இன்றைய தினம் எனக்குத் தடை பண்ணின படியினால், நீயும் ஆசீர்வதிக்கப்படுவாயாக" (25:32, 33). வெறுப்பு நிறைந்த சிந்தை கொண்டிருந்த தாவீது, தாம் ராஜாவாயிருக்க அவசியமான மதிப்புமிக்க பாடங்களைக் கற்றுக் கொண்டிருந்தார்: வன்முறை என்பது அதிகமான வன்முறையையே பிறப்பிக்கும்; அதற்கு மாறாக, கட்டுப் பாட்டுடன் இருத்தல் என்பது சமாதானம் நிறைந்த தீர்வை ஏற்படுத்தும்.*

*ஞானியான சாலொமோன், "மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடாதே; கொடுத்தால் நீயும் அவனைப் போலாவாய்" (நீதி. 26:4) என்று கூறினார். அது ஒருவேளை அவர் தம் தந்தை தாவீதிடமிருந்து கற்றுக் கொண்ட ஒரு பழமொழியாக இருக்கலாம் - ஏனெனில் தாவீது ஒரு மூடனுக்கு மிகவும் மதியீனமான வழியில் பதில்செயல் செய்வதற்கு அண்மையில் நெருங்கி வந்திருந்தார்.*

*"சரிக்குச் சரி செய்வதினால் நீங்கள் முன் சென்றுவிட முடியாது" என்று கூறப்படுகின்றது. மற்றவர்களை நாம் திருப்பித் தாக்க முயற்சிக்கும்போது, பொதுவாகவே அது நமக்குச் சாதகமில்லாதபடியே பிரதிபலிக்கும், மற்றும் அவர்களைப் புண்படுத்துவதை விட அதிகமாக நம்மையே புண்படுத்தும். ஒருமுறை நான், கார் விற்பனையாளர் ஒருவரால் நியாயமற்ற வகையில் நடத்தப்படுவதாக உணர்ந்தேன். "நான் (யார் என்பதை) அவருக்குக் காண்பிப்பேன்" என்று எனக்குள் நினைத்துக் கொண்டேன். "இனி இவரிடத்தில் வியாபாரத்தொடர்பு எதையும் நான் வைத்துக் கொள்ள மாட்டேன்!" கடைசியில், நாங்கள் வாழ்ந்த அந்த சிறு நகரில் எனது காரின் மீதான உத்தரவாதத்தை மதிக்கும் ஒரே வியாபார நிறுவனம் அவருடையது மட்டுமே என்பது எனக்கு உரைத்தது. அவர் என்னிடமான தமது வியாபாரத் தொடர்பை அருமையாகத் தவற விடலாம், ஆனால் நான் எனது காரை வேதனை மிக்க வகையில் தவற விட்டவனாக இருப்பேன்!*

*நீங்கள் அடுத்தமுறை யாரையாவது திருப்பித்தாக்கும்படி சோதிக்கப் படும்போது, பத்து (அல்லது இருபது அல்லது நூறு அல்லது நீங்கள் சாந்தமடைய எத்தனை எண்களை எண்ண வேண்டுமோ அத்தனை எண்களை) எண்ணத் தொடங்குங்கள், பின்பு "பழிவாங்குதலின் மிக உயர்வான விலையைப் பற்றி எண்ணுங்கள்" - உங்கள் நற்பெயர், உங்கள் மன சமாதானம், மற்றும் உங்கள் ஆத்துமாவிற்கும் கூட அது ஊறு விளைவிக்கலாம்.*

*அத்தியாயம் 25ன் வரலாறு விரைவாக முடிக்கப்படுகின்றது. அபிகாயில் வீட்டிற்குத் திரும்பிய போது, நாபால் அளவுக்கு மீறிக் குடித்திருந்தபடியால் என்ன நடந்தது என்பதை அவனிடத்தில் கூற இயலவில்லை (25:36).[24] அடுத்த நாள் காலையில் அவன் தெளிவான போது, அவள் நடந்தவற்றை அவனிடத்தில் கூறினாள் - அவனுக்கு மாரடைப்பு ஏற்பட்டது [வேதவசனப் பகுதி, "கல்லைப் போலானான்" என்று கூறுகின்றது]. ஒரு சில நாட்களுக்குப் பின்பு அவன் இறந்து போனான்.[25] இதைப் பற்றித் தாவீது கேள்விப்பட்ட போது அவர், "என் நிந்தையின் வழக்கை நாபாலின் கையில் விசாரித்து, தம்முடைய அடியானைப் பொல்லாப்புச் செய்யாதபடிக்குத் தடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; கர்த்தர் தாமே நாபாலின் பொல்லாப்பை அவன் தலையின்மேல் திரும்பப் பண்ணினார்" (25:39) என்று கூறினார்.*

*தாவீது, அபிகாயில் என்ற இந்த அழகிய மற்றும் ஆதாரமூலங்கள் நிறைந்த பெண்ணின் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்டார், எனவே அவர் (அவளைத்) திருமணம் செய்து கொள்வதான ஒரு முன்மொழிதலுடன்[26] வேலைக்காரர்களை அனுப்பினார், அவர்கள் கணவரும் மனைவியும் ஆனார்கள். இந்த வரலாறானது, தாவீது ஒரு நல்ல உணவை விரும்பிய*

*நிகழ்வுடன் தொடங்கிற்று; இது தாவீது ஒரு நல்ல மனைவியைக் கண்டறிதலுடன் முடிகின்றது.*[27]

*அந்த நாளில் தாவீது மதிப்புமிக்க பாடங்கள் சிலவற்றைக் கற்றார். முதலாவது, தனிப்பட்ட பழிவாங்குதல் என்பது அதற்கு விலை கொடுக்கக் கூடிய அளவுக்குத் தகுதியானதல்ல. இரண்டாவது, பழி வாங்குதலை நீங்கள் தேவன் கைகளில் விட்டுவிட்டால், அவர் எல்லாவற்றையும் நேராக்குவார். இவைகள் நாம் யாவரும் கற்றுக்கொள்ள அவசியமான பாடங்களாக உள்ளன.*

## *அதைக் கர்த்தரின் கரங்களில் விட்டுவிடுங்கள் (1 சாமுவேல் 26)*

*தாவீது அபிகாயிலிடமிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் அவருக்கு விரைவிலேயே அவசியமானவைகளாயிருந்தன. அவர் மீண்டும் ஒருமுறை சீப்பியர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டார் (26:1), மற்றும் சவுல் மீண்டுமாக அவரைத் தாக்கும் தொலைவுக்குள் வந்திருந்தார்.*[28] *சீப்ஊரார் கடைசியாகத் தாவீதைப் பார்த்திருந்த இடத்தில் சவுலும் அவரது படையினரும் முகாமிட்டு இருந்தார்கள்: அது ஆகிலா மேடு என்ற இடமாயிருந்தது.*[29] *சவுல் அந்தப் பகுதியில் இருப்பதாகத் தாவீது கேள்விப் பட்ட போது, சவுல் தம் வார்த்தையின்படி வாழ மீண்டும் தவறி விட்டார் என்பதை நம்புவதற்குத் தாவீது விரும்பவில்லை. ஒற்றர்கள் அந்தச் செய்தியை உறுதிப்படுத்தினார்கள், ஆனால் தாவீது அதைக் காணத் தாமே சென்றார்.*

*தாவீதும் அவரது மனிதர்களில் பலரும் அவ்விடத்தை அடைந்தபோது இராவாகியிருந்தது,*[30] *ஆனால் அருகாமையில் இருந்த ஒரு மலையிலிருந்து, வந்த வெள்ளி நிலவொளியானது சவுல் எங்கு உறங்கிக் கொண்டிருந்தார் என்பதைத் தாவீது காண அனுமதித்தது. தாவீது, தாம் சவுலுக்குத் துன்பம் தர நினைக்கவில்லை என்று நிரூபிக்க இடர்ப்பாடுமிக்க கடைசி முயற்சி யொன்றை மேற்கொள்ள முடிவு செய்தார். தாவீது, "என்னோடே கூடச் சவுலிடத்திற்குப் பாளையத்தில் இறங்கி வருகிறவன் யார்?" என்றதற்கு, (அவரது உறவினரான) அபிசாய்:*[31] *"நான் உம்மோடே கூட வருகிறேன் என்றான்" (26:6).*

*தாவீதும் அபிசாயியும் சவுலின் முகாமினுள் ஊர்ந்து வந்தபோது, காவலர்கள் இல்லாததைக் கண்டு அவர்கள் வியப்புற்றிருக்க வேண்டும். வசனம் 12, "கர்த்தர் அவர்களுக்கு [சவுலின் படையினருக்கு] அயர்ந்த நித்திரையை வருவித்ததினால் அவர்களெல்லாரும் தூங்கினார்கள்" என்று குறிப்பிடுகின்றது. இவ்விரு மனிதர்களும் முகாமின் மையப் பகுதியை அடையும் வரையிலும் [தூங்கிக் கொண்டிருந்த படை வீரர்களின்] உடல்கள் மீது கவனமாகத் தாண்டி வந்தார்கள், அங்கு சவுல் தூங்கிக் கொண்டிருந் தார், அவரது ஈட்டியானது அவரது தலைமாட்டின் அருகில் தரையில் குத்தி வைக்கப்பட்டிருந்தது.*[32] *முன்பு குகையில் இருந்த மனிதர்களைப் போலவே, அபிசாயியும் இதனை, தாவீது சவுலைக் கொல்ல வேண்டும் என்பதே*

*தேவனுடைய விருப்பமாயிருப்பதாகக் கண்டார் (26:8). சவுல் "கர்த்தருடைய மேசியாவாக" இருப்பதால் அவரை, தாம் துன்புறத்த முடியாது என்று மீண்டும் ஒருமுறை தாவீது கூறினார் (26:9; 26:11ஐயும் காணவும்).*

*இருப்பினும், இந்தமுறை தாவீது ஒரு சிந்தனையைக் கூட்டிக் கொண்டார் - இது நாபால் மற்றும் அபிகாயில் ஆகியோருடனான அவரது சந்திப்பின் விளைவாக எழுந்ததாக இருந்தது: பழிவாங்குதல் என்பது தேவனுடைய கரங்களில் விட்டுவிடப்பட வேண்டும்.[33] "பின்னும் தாவீது: 'கர்த்தர் அவரை அடித்து, அல்லது அவருடைய காலம் வந்து, அவர் மரித்து, அல்லது அவர் யுத்தத்துக்குப் போய் மாண்டாலொழிய' (26:10) என்று கூறினார்." வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், "ஒன்று சவுல், நாபால் மரித்தது போல - கர்த்தரால் அடிக்கப்பட்டு 'இயற்கையான மரணம்' எய்துவார் - அல்லது அவர் யுத்தத்தில் மரணம் அடைவார், ஆனால் ஒரு விஷயம் உறுதியானது: கடைசியில் கர்த்தர் எல்லாக் கடன்களையும் சரிக்கட்டுவார்" என்று அவர் கூறினார். (அது முடிந்தபோது, இரண்டாவது விஷயம் உண்மையாயிற்று: சவுல் யுத்தத்தில் மரித்தார்.)*

*தாவீது அபிசாயியிடம், "அவர் தலைமாட்டில் இருக்கிற ஈட்டியையும், தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக் கொண்டு போவோம்" (26:11) என்று கூறினார். அவர்கள் மிகவும் எச்சரிக்கையாக முகாமை விட்டு வெளியேறி, மலையிலிருந்து இறங்கி வந்து, பள்ளத்தாக்கினூடே கடந்து வந்து, அருகாமையில் உள்ள (இன்னொரு) மலையின் உச்சிக்கு ஏறினார்கள். அங்கு தாவீது, ராஜாவுக்கு அருகில் அவரைப் பாதுகாக்க உறங்கிக் கொண்டிருந்த அப்னேர்[34] என்பவரை (சத்தமிட்டு) அழைத்தார்: "... இஸ்ரவேலில் உமக்குச் சரியானவன் யார்?[35] பின்னே நீர் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் காக்காமற்போனதென்ன? ஜனத்தில் ஒருவன் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் கொல்லும்படி வந்திருந்தானே ... இப்போதும் ராஜாவின் தலைமாட்டில் இருந்த அவருடைய ஈட்டியும் தண்ணீர்ச் செம்பும் எங்கே என்று பாரும் என்றான்" (26:15, 16). சவுலின் படையினரைப் பார்க்கிலும் சவுலுக்குத் தாம் மேன்மையான நண்பராக இருந்தார் என்பதே தாவீதின் கருத்தாக இருந்தது, ஏனெனில் அப்னேரோ அல்லது படையினரோ அல்ல, ஆனால் தாமே, அபிசாயி இராஜாவைக் கொலை செய்வதினின்று அவரைத் தடுத்திருந்தார்.*

*சவுல் தாவீதின் குரலை அடையாளம் கண்டுகொண்டு, "என் குமாரனாகிய தாவீதே, இது உன் சத்தமல்லவா?" (26:17) என்று கூவினார். தாவீது சவுலுக்கு இன்னுமொரு உணர்வெழுச்சிமிக்க வேண்டுகோளினால் பதில் அளித்தார், மீண்டுமாக தமது குற்றமறியாத் தன்மையை உறுதியாய்ச் சூளுரைத்து, தாம் சவுலின் விரோதியல்ல என்பதற்கு நிரூபணமாக (அவரது) ஈட்டியையும் தண்ணீர்ச் செம்பையும் அவருக்குக் காண்பித்தார். அவர் பின்வருமாறு கூறினார்:*

> *இப்பொழுது ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய அடியானுடைய வார்த்தைகளைக் கேட்பாராக; கர்த்தர் [உம்மீது தண்டிக்கும்*

*ஆவியை அனுப்பியதினால்] உம்மை எனக்கு விரோதமாக எடுத்து விட்டதுண்டானால், அதற்கு அவர் காணிக்கையை ஏற்றுக்கொள் வாராக; மனுப்புத்திரர்*[36] *அதைச் செய்தார்களேயாகில், அவர்கள் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்படக் கடவர்கள்; அவர்கள்: "நீ போய்; அந்நிய தேவர்களைச் சேவி'' என்று சொல்லி, அவர்கள் இன்று என்னைக் கர்த்தருடைய சுதந்தரத்திற்கு அடுத்தவனாயிராதபடிக்கு, துரத்திவிட்டார்களே. இப்போதும் கர்த்தருடைய சமூகத்தில் என் இரத்தம் தரையில் விழாதிருப்பதாக; ... (26:19, 20).*[37]

*தாவீது ஒரு தேடப்பட்டவராக வாழும்படிக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட விஷயம் அல்ல, ஆனால் அதற்கு மாறாக அவர் தேவனுடைய மற்ற மக்களுடன் ஆசரிப்புக் கூடாரத்திற்குச் செல்ல முடியாத விஷயமே தாவீதைக் கவலைக்குள்ளாக்கியது! நமது சகோதர சகோதரிகளுடன் ஆராதிக்கக் கூடுவதற்குச் சாக்குப்போக்கு சொல்லிக் கொண்டிருக்கின்ற நம்மில் சிலரைப் போலின்றி, அவரது எண்ணப்போக்கு, " 'கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள்' என்று எனக்கு அவர்கள் சொன்ன போது மகிழ்ச்சியாயிருந்தேன்'' (சங். 122:1) என்பதாகவே இருந்தது. அவ்வாறு செல்ல இயலாத போது அவர் கவலைக்கு உள்ளானார்.*

*இருதயத்தை அசைத்த தாவீதின் உரையில், அவர் தாம் அபிகாயிலிடம் கற்றறிந்த பாடத்தையும் குறிப்பிட்டார்: "கர்த்தர் அவனவனுக்கு அவனவன் நீதிக்கும் உண்மைக்கும் தக்கதாகப் பலன் அளிப்பாராக" (26:23).*

*சவுல் மீண்டும் தமது இருதயம் தொடப்பட்டவராகத் தோன்றினார். அவர், "நான் பாவஞ் செய்தேன்"*[38] *என்றும், "நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன்" என்றும் கூறினார். அவர், "என் குமாரனாகிய தாவீதே, திரும்பி வா, இனி உனக்கு ஒரு பொல்லாப்புஞ் செய்யேன்" (26:21) என்று கெஞ்சினார். அவர் தொடர்ந்து தாவீதைத் தம் "குமாரன்" என்று அழைத்துக் கொண்டிருந்தார், ஆனால் தாவீது முந்தின வேளையில் சொன்னது போல, அவரை "என் தகப்பனே" (1 சாமு. 24:11) என்று அழைக்க வில்லை. தாவீது தம் மனைவியாகிய மீகாளைச் சவுல் இன்னொருவருக்குக் கொடுத்திருந்ததை அறிந்திருந்தார் (1 சாமு. 25:44). இனியும் சவுல் அவருக்கு (தாவீதுக்கு) மாமனாராயிருந்ததில்லை; தாவீது இனி சவுலின் குடும்பத்தில் ஒரு இடத்தைக் கொண்டிருக்கவில்லை. தாவீது திரும்பி வரத் துணிய வில்லை, எனவே அவர் "தன் வழியே போனான்; சவுலும் தன் ஸ்தானத் திற்குத் திரும்பினான்" (26:25).*

*பழிவாங்குதல் பற்றித் தாவீது கற்றுக் கொண்ட பாடத்தைக் காட்டிலும் முக்கியமான பாடத்தை ஒருவர் கற்றுக்கொள்ள இயலாது: ''அதைக் கர்த்தருடைய கரங்களில் விட்டுவிடுங்கள்.'' இன்றியமையாத இந்த சத்தியமானது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் போதிக்கப்பட்டுள்ளது: உபா. 32:35, 36; எபி. 10:30 முதலியன. இந்த சத்தியத்தின் வல்லமை மிகுந்த செயல்விளக்கமானது கிறிஸ்துவின் வாழ்வில் காணப்படுகின்றது. பேதுரு பின்வருமாறு எழுதினார்:*

*இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில்,*

> *கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாய மாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் (1 பேது. 2:21-23).*

*கிறிஸ்து, "பழிவாங்குதலைத் தேவனுடைய கரத்தில் ஒப்புவித்தார்" - மற்றும் அதை நமக்கு ஒரு எடுத்துக்காட்டாகச் செய்தார் என்று பேதுரு கூறினார்.*

*பவுல் இந்த அறைகூவலை ரோமர் 12ல் எதிரொலித்தார். வசனம் 17ல் அப்போஸ்தலர், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்" என்று கூறினார். அதை நான் எழுதவில்லை. அதை நான் எழுதியிருந்தால், "தீமைக்குத் தீமையை எப்போதாவது செய்யுங்கள்" என்றோ அல்லது, "அதிகமான மக்களுக்கு அரிதாக தீமைக்குத் தீமையைச் செய்யுங்கள்" என்றோ எழுதியிருப்பேன். ஆயினும் பவுல், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்" என்றே கூறினார். பின்பு அவர் பின்வருமாறு தொடர்ந்தார்: "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, 'பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்', என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக் கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங் கொடுங்கள்" (ரோமர் 12:18, 19). இவ்வசனப் பகுதியானது, "பொல்லாங்கு தண்டிக்கப்படாமல் விட்டுவிடப்படும்" என கூறுவதில்லை என்பதைக் கவனியுங்கள். பிறரைப் புண்படுத்துகின்றவர்கள் "தங்களுக்கு உரிய பலனைப் பெறுவார்கள்" ... ஆனால் "அவர்களுக்கு அதைக் கொடுப்பவர் கள்" நாமல்ல என்பதை இவ்வசனம் வலியுறுத்துகின்றது. அது தேவனுடைய இடமாயிருக்கிறது, நம்முடையதல்ல. அதை நாம் தேவனுடைய கரங்களில் விட்டுவிடக் கடவோம்.*

## *மன்னித்து மறந்துவிடுங்கள்*
## *(2 சாமுவேல் 1)*

*நமது பாடத்தின் முடிவை நாம் நெருங்குகையில், சவுலுடனான தாவீதின் உறவுமுறையில் ஒரு கடைசிக் கொள்கையைக் கவனிக்க, நாம் தாவீதும் அவர் மனிதர்களும் பெலிஸ்தியர்கள் மத்தியில் வாழ்ந்த காலகட்டத்தை நோக்கி சற்று நேரம் கடந்து செல்வோம்; இதைக் கூறுவது எளிது, ஆனால் செய்வது மிகவும் கடினமாகும்: "மன்னித்து மறந்து விடுங்கள்."*

*1 சாமுவேல் 31ல், சவுல் தமது பட்டயத்தின்மீது விழுந்து தற்கொலை செய்து கொண்டபோது அவர் இறந்து போனதைப் பற்றி நாம் வாசிக்கின்றோம் (வ. 4). 2 சாமுவேல் 1ல், ராஜாவின் மரணம் பற்றித் தாவீது அறிந்தார். இது தாவீது அகம் மகிழ மிகச் சரியான தருணமாக இருந்திருக்க வேண்டும், தம்மை அழிக்க முயற்சி செய்திருந்தவரை அவர் உடனடியாகச்*

*சிறுமைப்படுத்தத் தொடங்கியிருக்கலாம். அதற்குப் பதிலாகத் தாவீது, அழுது புலம்பி, அவரை(சவுலை)க் கனப்படுத்த அழகுமிக்க ஒரு இரங்கற் பாடலை எழுதினார். தாவீது தம் நண்பரான யோனத்தான் மீது கொண்டிருந்த அன்பு இந்த இரங்கற்பாடலில் அமைவு பெற்றிருந்தது என்று நாம் முந்திய பாடம் ஒன்றில் குறிப்பிட்டோம். இருப்பினும், சவுலின் பெயர் எப்பொழுதுமே இந்தப் பாடலில் முதலில் உள்ளது என்ற உண்மையை நாம் தவற விடக் கூடாது. இது (சவுலின் பெயர்), ராஜாவைப் பற்றிக் கூறப்பட்ட "கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்", என்று பொருத்தமானதாய், இன்னும் பல பாராட்டுரைகளினால் தகுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

> *தாவீது சவுலின் பேரிலும், அவன் குமாரனாகிய யோனத்தானின் பேரிலும் புலம்பல் பாடினான்.*[39]

> *"இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று!*
> *பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்கள்.*
> *பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப்படாதபடிக்கும்,*
> *விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராதபடிக்கும்,*
> *அதைக் காத் பட்டணத்தில் அறிவியாமலும்*
> *அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருங்கள்.*[40]
> *கில்போவா மலைகளே,*[41] *உங்கள்மேல் பனியும் மழையும்*
> *பெய்யாமலும்,*
> *காணிக்கைக்கு ஏற்ற பலன் தரும் வயல்கள் இராமலும் போவதாக;*
> *அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது;*
> *சவுல் தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படாதவர்போல அவர்*
> *கேடகமும் அவமதிக்கப்பட்டதே.*[42]
> *கொலையுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாமலும்,*
> *பராக்கிரமசாலிகளின் நிணத்தை உண்ணாமலும், ...*
> *சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை.*
> *உயிரோடே இருக்கையில் சவுலும் யோனத்தானும்*
> *பிரியமும் இன்பமுமாயிருந்தார்கள்;*
> *மரணத்திலும் பிரிந்து போனதில்லை;*
> *கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப் பார்க்கிலும்*
> *பலமுமுள்ளவர்களாயிருந்தார்கள்.*
> *இஸ்ரவேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம்பரத்தைச்*
> *சிறப்பாய் உடுப்பித்து,*
> *உங்கள் உடையின்மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த*[43]
> *சவுலுக்காக அழுது புலம்புங்கள் ...*
> *பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே;*
> *யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே!"*[44]
> *(2 சாமு. 1:17, 19-24, 27).*

*சில வேளைகளில், பரிபூரணத்திற்குக் குறைவான வாழ்வை வாழ்ந்த ஒருவரின் சவ அடக்கத்தின் போது*[45] *அவர் புகழப்படுகின்றார், மக்கள் "என்ன ஒரு மாய்மாலப் பேச்சு!" என்று முணுமுணுக்கின்றார்கள். தாவீது சவுலைப் புகழ்ந்தபோது, அவர் பொய்யுரைத்தாரா அல்லது மாய்மாலம்*

செய்தாரா? இல்லை, சவுலைப் பற்றி அவர் கூறியது யாவும் உண்மை யானதாகவே இருந்தது. மோசமானவைகளுக்குப் பதிலாக நல்லவைகளை மட்டும் நினைவுகூர்வதைத் தாவீது தேர்ந்து கொண்டார். (இதைச் செய்ததில்) தாவீது உண்மையற்றவராயிருந்ததில்லை; மாறாக அவர், நாம் கொண்டுள்ள விலைமதிப்பு கூடிய ஒரு விருப்பத்தேர்வைச் செயல்படுத்தினார்: "மன்னித்து மறந்துவிடுதல்" என்ற விருப்பத் தேர்வு.

வில்லியம் பெயின்ட்டர் என்பவரின் முடிவை இந்த உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது: "பழிவாங்குதல் என்பது இனிமையானதாக உள்ளது."[46] ஆயினும், பழிவாங்குதலைக் காட்டிலும் மிகவும் இனிமையான விஷயம் ஒன்றுள்ளது; அது, புண்படுதல் வேதனை ஆகியவற்றிற்கும் மேலாக எழும்பி நின்று, மன்னித்தலாக உள்ளது ... அவர் "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக். 23:34) என்று ஜெபித்த இயேசுவைப் போல் இருத்தல் என்பதாக உள்ளது ... நாம் மன்னிக்கப்படும்படியாக மன்னித்தல் என்பதாக உள்ளது (மத். 6:14, 15).

இந்த ஆலோசனையை அளிப்பதில் நான், "மன்னித்து மறத்தல்" என்ற நன்கு பழக்கமான சொற்றொடரைப் பயன்படுத்துகின்றேன். நம்மில் எவரும் நமது உணர்வில் உள்ள ஒரு காயத்தை முற்றிலும் மறந்து விடவோ அல்லது அதை முழுவதுமாக நமது சிந்தையில் இருந்து அழித்து விடவோ முடியாது. ஆயினும் நாம், தேவன் செய்கிறது போல அவற்றை "மறந்துவிட" முடியும்.[47] மன்னிக்கப்பட்டவருக்கு எதிராகத் தீங்கிழைத்தலைப் பற்றிக் கொண்டிராதபடி நாம் தேர்ந்து கொள்ள முடியும், மற்றும் அதைத் தொடர்ந்து வெளிக் கொண்டு வராதபடி நாம் தேர்ந்து கொள்ளவும் முடியும். தாவீது சவுலுக்காகப் புலம்பிய பொழுது இதையே அவர் செய்தார்.

டென்னஸ்ஸீயின் ஹாப்கின்ஸ்வில்லில் உள்ள லிட்டில் ரிவர் கிறிஸ்துவின் சபையின் உறுப்பினர்களான ஃப்ராங்க் மற்றும் எலிசபெத் மோரிஸ் ஆகியோர், மன்னித்தலின் இனிமையை ஒரு கடினமான வழியில் கற்றார்கள். 1982ன் கிறிஸ்மஸ்க்குச் சற்று முன்னர், அவர்களின் ஒரே மகனும் டேவிட் லிப்ஸ்கோம்ப் கல்லூரி மாணவருமான டெட் என்பவர், ஒரு குடிகார ஓட்டுநரால் கொல்லப்பட்டார். இருதயம் உடைந்து போன மோரீஸ் தம்பதியர் பழிவாங்குதலை வேண்டி நின்று, தங்கள் மகனைக் கொன்ற டாமி பிக்கேஜுக்கு மரண தண்டனை தர வேண்டும் என்று நாடினார்கள். ஆயினும், குற்றச்சாட்டுகள் மனிதக் கொலை(நீதி மன்றத்து)க்கு மாற்றப்பட்ட போது, அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை குறைக்கப்பட்டது. மோரீஸ் தம்பதியர் கசப்பினால் பட்சிக்கப்பட்டார்கள். அவர்கள், பழிவாங்குதலுக்கான தங்கள் தாகம், வேதாகமத்தின் போதனைக்கு முரண்பட்டது என்பதை உணர்ந்தது அவர்களின் பிரச்சனை யாயிற்று. அவர்கள் கோபத்தால் மட்டுமின்றி, குற்ற உணர்வினாலும் நிறைந்தவர்களாயினர்.

அவர்களின் உணர்வுகளின் வீர காவியம் பற்றி, Revenge Redeemed என்ற தலைப்பில் ஒரு ஆழப்பதியச் செய்யும் புத்தகம் எழுதப்பட்டுள்ளது.[48] இந்தத் தொகுப்பு, ஃப்ராங்க்கும் எலிசபெத்தும் வெறுப்பில் இருந்து அன்பிற்குக் கடந்து சென்றது எவ்வாறு, அவர்கள் டாமி பிக்கேஜை மன்னிக்கக் கற்றுக்

கொண்டது எவ்வாறு, மற்றும் அவரை சபையின் உறுப்பினராகும்படி கூட வழிநடத்தியது எவ்வாறு என்பவை பற்றிக் கூறுகின்றது. அப்புத்தகத்தின் பின் அட்டையில் ஃப்ராங்க் மற்றும் எலிசபெத் ஆகியோர் டாமி பிக்கேஜ்ஜுடன் இருக்கும் புகைப்படம் ஒன்று அச்சிடப்பட்டுள்ளது.

தாவீது அதைச் செய்திருந்தால், மோரீஸ் தம்பதியர் அதைச் செய்திருந்தால், நாமும் அவ்வாறே செய்ய முடியும். "மன்னித்து மறக்கும் அளவுக்கு" நாம் யாவரும் பெரியவர்களாயிருக்க தேவன் நம் யாவருக்கும் உதவுவாராக.

## முடிவுரை

பழிவாங்குதலின் சிந்தனைகளைக் கையாளுதல் பற்றிய எனது நான்கு ஆலோசனைகளில் நான் வழக்கத்தில் இல்லாது நைந்துபோன சொற்றொடர்களைப் பயன்படுத்தியிருப்பதைச் சிலர் கவனித்து இருப்பார்கள்: "ஆதார மூலத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்", "விலையை எண்ணுங்கள்", "அதைக் கர்த்தரின் கரங்களில் விட்டுவிடுங்கள்", "மன்னித்து மறந்து விடுங்கள்." வழக்கத்தில் இல்லாது நைந்துபோன சொற்றொடர்கள் கெட்ட பெயர் கொண்டுள்ளன; எழுதத் தொடங்குபவர்கள், "வழக்கத்தில் இல்லாது நைந்துபோன சொற்றொடர்களைத் தவிர்த்து விடுங்கள்" என்று எச்சரிக்கப்படுகின்றார்கள். இவ்வித சொற்றொடர்களை அவையிருக்கும் விதமாக ஆக்குவது எது என்பதை நாம் சில வேளைகளில் மறந்து விடுகின்றோம்: இவைகள், நாம் கூற விரும்பும் விஷயத்தை வெளிப்படுத்துகின்ற மாபெரும் பணியைச் செய்கின்றபடியால் அவ்விதமானவைகளாக உள்ளன. நான் கொடுத்துள்ள நான்கு ஆலோசனைகள், பழமையான வாக்கியங்களாக இருக்கலாம், ஆனாலும் அவைகள் வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்களை, நாம் மனசமாதானம் கொண்டவர்களாய் வாழவும், மரிக்கும் பொழுது, பரலோகம் செல்லவும் விரும்பினால் நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய சத்தியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இந்தப் பிரசங்கத்தை நாம் இயன்ற அளவுக்கு நமது தனிப்பட்ட வாழ்வுக்கும் நடைமுறைக்கும் உகந்த வகையில் செயல்படுத்துவோம். நான் இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்ட பழி வாங்குதலின் பளபளக்கும் பெட்டியை நீங்கள் இன்னும் வைத்திருக்கின்றீர்களா? அப்படியென்றால், உங்கள் விரலை அதன் பொத்தானில் இருந்து எடுத்து விட நாம் முயற்சி செய்வோம்: கடந்த காலத்தில் உங்களை மனம் புண்படச் செய்தது பற்றி யார் மீதாவது உங்கள் இருதயத்தில் இன்னமும் கசப்புணர்வு உள்ளதா? அந்தக் கசப்புணர்வு உங்கள் இருதயத்தில் இருக்கும் வரையிலும், உங்கள் மனதைப் புண்படுத்திய அந்த நபர் உங்கள் வாழ்வையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பார் என்பதை உணர்ந்தறியுங்கள். அந்தக் கசப்புணர்வு அவரையல்ல, உங்களையே புண்படுத்துகின்றது. "ஆதார மூலத்தை ஆழ்ந்து சிந்திப்பதன்" மூலமாகவும், பதிலுக்குப் பதில் செய்வதற்கான உயர்ந்த பட்ச விலையை எண்ணுவதன் மூலமாகவும் கூட, அதை உங்கள் இருதயத்திலிருந்து தோண்டியெடுத்து வெளியேற்றுங்கள்.

*விஷயங்களைக் கர்த்தரின் கரங்களில் விட்டுவிடவும், அவற்றைத் தேவன் தமக்கே உரிய காலத்திலும் இடத்திலும் தீர்த்து வைக்க அனுமதிக்கவும் தீர்மானம் செய்யுங்கள். உங்கள் பகுதியில், கசப்புணர்வின் சுமையை எறிந்து போடுதலின் - மன்னித்து மறத்தலின் அனுபவம் எவ்வளவு இனிமையானது என்பதைக் கற்றறியுங்கள்.*

---

## *பிரசங்க மற்றும் காட்சி - உதவிக் குறிப்புகள்*

***பிரசங்கக் குறிப்புகள்:*** *நம்மில் பலர் தவறாக நடத்தப்படுவதைக் கையாள்வது எப்படி என்பது நமக்குப் போதிக்கப்படாதிருப்பதாலேயே, அதைக் கையாள்வது எப்படி என்பதை அறியாமல் இருக்கின்றோம். பெற்றோர் என்ற வகையில் நாம் நமது பிள்ளைகளுக்கு, புண்படுத்தப் படுதலின் போது பதில்செயல் செய்வது எப்படி என்பதைக் கற்றுத் தருவது இன்றியமையாததாக உள்ளது. இந்தப் பிரசங்கத்தை அந்தத் திசை நோக்கிச் சாய்க்க முடியும்: "பழி வாங்குதல் பற்றி நமது பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டியது என்ன."*

*இந்த அத்தியாயங்களில், அபிகாயிலின் பண்புநலன்கள் மிக முக்கிய மான கருத்தமைவுகளில் ஒன்றாயிருக்கின்றது. அவளைப் பற்றிய பிரசங்கத்தை ஒருவர் பிரசங்கிப்பதினாலேயே பயனடைய முடியும்.*

*"நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன்" என்ற சவுலின் கூற்றானது (1 சாமு. 26:21) அவரது வாழ்வு பற்றிய முழுமையான தொகுப்புரை ஒன்றை வழங்குகின்றது. "தன்னையே முட்டாளாக்கிக் கொண்டவர்" என்ற தலைப்பின் கீழ் அற்புதமான பல பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன.*

*சங்கீதம் 7, தாவீதின் உரையாக அத்தியாயங்கள் 24 மற்றும் 26ல் உள்ளவற்றை எடுத்துரைக்கலாம். மற்ற பல சங்கீதங்கள் தாவீதின் விரோதி களைப் பற்றிக் கூறுகின்றன. அவற்றில் விசேஷமாக வல்லமை நிறைந்த ஒன்றாக விளங்குவது சங்கீதம் 22 ஆகும்.*

***காட்சி - உதவிக் குறிப்புகள்:*** *பொய்யான ஒரு சிகப்பு நிறப் பொத்தானு டன் கூடிய பெட்டியொன்றை இந்தப் பிரசங்கத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் பயன்படுத்தலாம்.*

---

*குறிப்புகள்*

[1]*அமெரிக்கர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் சுமார் ஒரு கோடியே தொன்னூறு இலட்சம் வழக்குகளைப் பதிவு செய்கின்றார்கள். சமீபத்தில், செய்தி விளக்கவுரை யாளர் ஒருவர், "வழக்குரைப்புகளின் மீது அமெரிக்காவின் நேசப்பிணைப்பு" பற்றிப் பேசியுள்ளார்.* [2]*ஆயினும், நான் "ஆதாரமூலத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்" என்று கூறும் பொழுது - நாம் பிற்பாடு பார்க்கப்போகின்றபடி - சவுலின் மனநிலையைக் காட்டிலும் அதிகமானவற்றை என் சிந்தையில் கொண்டுள்ளேன்.* [3]*சவுல், தாவீதையும் அவரது தோழர்களையும் காணாதது ஏன்? முதலாவது, இருளுக்குப்*

பழகக் கண்களுக்குச் சற்று நேரம் தேவைப்படும். இரண்டாவது, தாவீதும் அவரது அறுநூறு மனிதர்களும் குகையின் பின்பகுதியில் (''உள்ளான இடங்களில்'') இருந்தனர், அநேகமாக அவர்கள் பாறையின் இயற்கையான ஒளிவிடங்களில், பொந்துகளில் மற்றும் அது போன்ற இடங்களில் மறைந் திருக்கலாம். [4]இன்னுமொரு விவரிப்பை ஆழ்ந்து சிந்தியுங்கள்: (படைப்) பணியில் உள்ள மனிதர்கள், மனிதருக்கல்ல ஆனால் அவர்களின் பதவிக்காகவே வணக்கம் செலுத்தும்படி கூறப்படுகின்றனர். [5]இவ்வசனப் பகுதியின் அடிக்குறிப்பைக் கவனிக்கவும்: "பல கைப்பிரதிகளில் இவ்விடத்தில் பின்வரும் வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன: உனக்கு விரோதமாக." தகுதிப்படுத்தும் இந்தச் சொற்றொடரைச் சேர்த்துள்ள KJV மற்றும் பிற மொழிபெயர்ப்புகளைக் காணவும். [6]இதை "தனித்திருக்கும்போது" செய்யும்படி இயேசு கூறினார், ஆனால் இது தாவீதின் சூழ்நிலைகளுக்குப் பொருந்தி வராதிருந்தபடியால் நான் இவ்வார்த்தை களை விட்டுவிட்டேன். தாவீது தமது உயிரைக் கைவிடும் சூழ்நிலையின்றி சவுலுடன் "தனித்துப்" பேச முடியாதிருந்தது. [7]இந்த இடத்தில் மற்றும் இந்தக் கணத்தில் தாவீது, சவுலை எதிர்கொண்டு நின்றதில் கணக்கிடப்பட்ட இடர்ப்பாட்டை மேற்கொண்டிருந்தார். சவுலும் அவரது படையினரும் ஒரு குறுகிய தொலைவிலேயே இருந்தார்கள். தாவீது வெற்றிகரமாயிருந்திராமற் போயிருந்தால், அவரும் அவரது மனிதர்களும் விரைவிலேயே தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள யுத்தம் செய்ய வேண்டியதாய் இருந்திருக்கும். எதிர்கொண்டு நிற்குதலில் எப்பொழுதுமே கணக்கிடப்பட்ட இடர்ப்பாடு உள்ளது. [8]இது, சவுல் வயதில் மூத்தவராக இருந்தார் என்று உண்மையினால், அரசர் என்பவர் நாட்டின் ஆவிக்குரிய தலைவராயிருந்தார் என்ற உண்மையினால், மற்றும்/அல்லது சவுல் தாவீதின் மாமனாராக இருந்தார் என்ற உண்மையினால் மரியாதையை காண்பிப்பதற்காகச் செய்யப்பட்டிருக்கலாம். [9]ஒரு நபரின் வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு சிறு விஷயத்தையும் பதிவு செய்தல் என்பது சோர்வூட்டுவதாகவும் சலிப்பூட்டுவதாகவும் இருக்கும். [10]இந்த கர்மேல் யூதேயாவில் மாகோனுக்கு அருகில் உள்ளது. இது இந்த நாட்டின் வடபகுதியில் கடற்கரையோரமாக அமைந்திருந்த கர்மேல் மலை அல்ல.

[11]"மகாபாரி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை "கனத்த" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது; அமெரிக்காவில் நாங்கள் நாபால் "(பணம்)சுமத்தப்பட்டவனாக" இருந்தான் என்று கூறுவதுண்டு. (இது நாம் தமிழில் "கொழுத்த பணக்காரன்" என்று கூறுவதற்கு ஒப்பானது.) [12]வேத வசனம் "இவன் காலேபின் சந்ததியைச் சேர்ந்தவன்'' என்றும் கூறுகின்றது. இது, அவன் யோசுவாவுடன் உண்மையாக ஊழியம் செய்த காலேபின் வழித் தோன்றலாக இருந்தான் என்ற உண்மையைக் குறிப்பிடலாம் அல்லது (பின்வரும் எஞ்சியுள்ள விவரிப்புகள் சிறுமைப்படுத்துவதாயிருப்பதால்,) அவன் நாயைப் [இது "காலேப்" என்பதன் மூல அர்த்தமாக உள்ளது.] போன்றவனா யிருந்தான் என்றும் அர்த்தப்படுத்தும் வகையில் ஒரு அவமானப்படுத்தும் சொற்றொடராகவும் இருக்கலாம். [13]நேரடியான அர்த்தத்தில் "பேலியாளின் மகன்" [தமிழில் இந்த நேரடி அர்த்தமே தரப்பட்டுள்ளது ஆங்கிலத்தில், 'such a worthless man' என்றுள்ளது.] இது, ''மதிப்பே இல்லாதவனின் மகன்'' என்று அர்த்தப்படுகின்றது. [14]விநோதமான செயல்கள் நடைபெற்றன. பல பெயர்கள், அவை ஒலிக்கும் விதம் பெற்றோருக்குப் பிடித்திருந்ததாலேயே வைக்கப்பட்டன, அந்தப் பெயர் எதனை அர்த்தப்படுத்திற்று என்பது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. [15]மற்ற மூவர் சாராள், பத்சேபாள் மற்றும் வஸ்தி ஆகியோராவார்கள். [16]இந்த இடத்தில் KJVயில் மிகச் சரியான மொழிபெயர்ப்பு உள்ளது, ஆனால் ''ஆண்'' (நாய்) என்பது விரும்பத்தக்கதாக உள்ளது. [17]சவுலுக்கும், நியாயமற்றவனான மற்றும் சுயத்தை

மையங் கொண்டிருந்த வனான நாபாலுக்கும் இடையில் பல இணைக் கருத்துக்களைக் கொண்டு வர முடியும். "நாபால்" என்றால் "முட்டாள்" என்பதை நினைவில் வையுங்கள், அடுத்த அத்தியாயத்தில் சவுல் தம்மை இவ்வாறாகவே அழைத்துக் கொண்டார் (1சாமு. 26:21). [18]அவள் ஓரமாக நின்றுகொண்டு, தாவீதையும் அவர் மனிதர்களையும் உற்சாகப்படுத்தியிருக்கவும் முடியும். [19]வேத வசனப்பகுதி, "அவள் அதைத் தனது கணவனிடம் கூறவில்லை" (1 சாமு. 25:19) என்று குறிப்பிடுகின்றது. அவள் கீழ்ப்படிதலுடன் இருக்கத் தவறி விட்டாளா? அவள் நாபாலின் உயிரைக் காக்கச் சென்றதால், நம்மில் பலர் அவளைக் குற்றப்படுத்துவோம் என்பதில் நான் சந்தேகப்படுகின்றேன். சில வேளைகளில் என் மனைவி முதலில் என்னிடம் கூறாமலே என்னைத் தற்காத்திருக்கின்றார்கள், அது தெரிந்த பின்பு நான் அவர்களைப் பாராட்டுவதுண்டு. [20]இவ்விடத்தில் ஸ்வின்டால் அவர்கள், "What to Feed an Angry Man" (N.p., n.d.) என்ற தம் ஒலிநாடாவில், "அதிலும் சிறப்பாக தன் கையில், உணவுப்பானை ஒன்றை வைத்திருந்தவளிடம்" என்று கூடுதலாகக் கூறினார்.

[21]1 சாமுவேல் 25:29ல் அபிகாயிலின் விமர்சனமானது, "தேவன் உம் உயிரைக் காத்து உமது விரோதிகளின் வாழ்வை முடிப்பார்" என்று குறிப்பாகக் கூறுகின்ற உருவக நடையாக உள்ளது. [22]தாவீது அடுத்த ராஜாவாக ஆவார் என்ற அபிகாயில் எப்படி அறிந்தாள்? ஒருவேளை அவள் "தாவீது கொன்றது பதினாயிரம்" என்ற பாடலைக் கேள்விப் பட்டு, அவரே தர்க்கப் பொருத்தமாக அடுத்த அரசாள்பவராகத் தெரிந்து கொள்ளப் படுவாரென்று யூகித்திருக்கலாம். ஒருவேளை, சவுலின் வார்த்தைகள் (1 சாமு. 24:20) அந்த பகுதி முழுவதிலும் பரவியிருக்கலாம். அவளது வார்த்தைகள் ஏவுதல் பெற்றவை என்று ஒரு சிலர் நினைக்கின்றார்கள். [23]யாக்கோபு 3:17ஐக் காணவும். அபிகாயில் தனது சொந்தக் கணவனிடத்தில் பேசக் கூடாதவளாயிருந்தாள்; அவளால் தாவீதிடம் பேச முடிந்திருந்தது. [24]ரிக் ஆட்லி அவர்கள், "பாராட்டுதலைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, மதுமயக்கத்தைக் காணும்படிக்கே அவள் இல்லம் திரும்பினாள்" என்று குறிப்பிட்டார். "Beauty and the Beast" (N.p., n.d.), sound cassette. [25]இந்த நாபால் என்பவன், இயேசுவின் உவமையொன்றில் (லூக். 12:16-21) வரும் செல்வந்தனான மதியீனனுக்கு முன்னு தாரணமாக இருந்தான் என்பதில் ஒருவர் வியப்படையாமல் இருக்க முடியாது. [26]அந்த முன்மொழிதலுக்கு அவளது பதில் பின்வருமாறு இருந்தது: "இதோ, நான் என் ஆண்டவனுடைய ஊழியக்காரரின் கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாள்" (25:41). அந்தக் கருத்துக் குறித்து ஸ்விண்டால் அவர்களின் குறிப்புரை பின்வருமாறு இருந்தது: "நண்பர்களே, உங்கள் திருமண முன்மொழிதல்களில், அவள் (நீங்கள் நேசிக்கும் பெண்) இவ்விதமாக மறுமொழி உரைத்தாள், அவளைக் கவர்ந்து கொள்ளுங்கள்!" [27]1 சாமுவேல் 25:43, 44ல் உள்ள நேரெதிர்க் கருத்தைக் கவனியுங்கள். வசனம் 44, சவுல் மீகாளை இன்னொருவருக்குக் கொடுத்திருந்தார் என்று குறிப்பிடுகின்றது, வசனம் 43, அபிகாயில் தாவீதின் இரண்டாவது மனைவியானாள் என்று குறிப்பிடுகின்றது. சவுல் தாவீதிடத்திலிருந்து ஏதாவதொன்றை எடுத்துக் கொண்ட போதெல்லாம், தேவன் அதற்குப் பதிலாக வேறொன்றைத் தாவீதிற்கு அளித்தார். [28]இது, ஒரே வரலாற்றின் இன்னொரு எடுத்துரைப்பு என்று சில விமர்சகர்கள் உரிமைகோருகின்றார்கள். ஆயினும், அப்படிப்பட்ட உறுதிப்பாட்டை ஆதரிக்கும் வேத வசன ஆதாரம் எதுவும் இல்லை. இந்த இரு வரலாறுகளும் பல வேறுபாடு களைக் கொண்டுள்ளன. [29]இந்த மலை இருந்த சரியான இடம் அறியப்படாததாக உள்ளது. இது, "எஷிமோனுக்கு" எதிராக இருந்தது. எஷிமோன் என்றால் "பாலைவனம்" என்று மட்டுமே அர்த்தப்படுகின்றது. இது சீப் வனாந்தரத்திற்கு (26:2) அடுத்திருக்கும் என்பது

*தெளிவு. [30]சவுல் ஏற்கனவே "ஜனங்கள் [அவரைச்] சுற்றிலுமிருக்கப் படுத்திருந்தார்" (26:5) என்ற உண்மையினால் மறைமுகமாய்க் குறிப்பிடப்படுகின்றது.*

*[31]இவர் தாவீதின் சகோதரிகளில் ஒருத்தியான செருயாவின் மகனாயிருந்தார் (26:6; இ.வ. 1 நாளா. 2:16). பத்துப் பிள்ளைகளில், தாவீது எல்லாருக்கும் இளைய வராயிருந்ததால், அவர் அநேகமாகத் தமக்கும் மூத்தவர்களான மைத்துனர்களையும் சகோதரி மகன்களையுமே கொண்டிருந்திருப்பார், அவர்கள் முதியவர்களா யிருந்திருக்க அவசியமில்லை. [32]தாக்குதல் செய்ய வேண்டியிருந்தால் கையில் எடுக்க வசதியாக ஈட்டி அவ்விடத்தில் தரையில் ஊன்றப்பட்டிருக்கலாம். ஆயினும், அநேகமாக அது முகாமின் "தலைமையிடத்தை" சுட்டிக் காண்பிப்பதாகவே இருந்திருக்கும். ஈட்டியானது சவுலினால் தமது பதவியின் அடையாளமாக, ஒரு செங்கோலாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் என்பது உறுதி. [33]அத்தியாயம் 24ல், தாவீது, தேவன் அவருக்கு நீதியைச் சரிக்கட்ட வேண்டும் என்று ஜெபித்தார் (வ. 12); இப்பொழுது, அதுவே விஷயமாயிருக்கும் என்பதில் தமக்கிருந்த நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார். [34]1 சாமுவேல் 26:14ஐக் காணவும். தாவீது அப்னேரை அழைத்தாலும், அப்னேர் அந்த அழைப்பு ராஜாவை நோக்கி விடுக்கப்பட்டதாவே எடுத்துக் கொண்டார், ஏனெனில் ஒரு நாளின் உடன்படிக்கை அழைப்பில், ராஜாவை நோக்கி நேரடியாக அழைப்பு விடப்படுவதில்லை. [35]சவுலின் படையில் அப்னேரைப்போல யாரும் இருந்தது இல்லை; சவுலின் வாழ்வில் கலக்கம் நிறைந்த வேளை முழுவதிலும் வேறு எவரும் (அப்னேரைப் போல) வீரத்துடனும் உண்மையுடனும் விளங்கியதில்லை. அப்னேர் மரித்த பொழுது, தாவீது "இன்றைய தினம் இஸ்ரவேலில் பிரபுவும் பெரிய மனுஷனுமாகிய ஒருவன் விழுந்தான்" (2 சாமு. 3:38) என்று கூறினார். [36]தாவீது, அத்தியாயம் 24ல் தமது உரையில் இந்தச் சாத்தியக்கூற்றைக் குறிப்பிட்டார். கூஷ் என்பவன் சவுலைக் கலங்கப் பண்ணிக் கொண்டிருந்தான் என்று சங்கீதம் 7 குறிப்பிடுவதாகச் சிலர் நினைக்கின்றார்கள். (அந்த சங்கீதத்தின் அறிமுகக் குறிப்பைக் கவனிக்கவும்; கூஷ் மற்றும் சவுல் ஆகிய இருவருமே பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள்.) [37]இந்த வார்த்தைகள், தாவீது தேவனைக் குறித்து, தேவன் ஏதாவது ஒரு பகுதியில் இருக்கின்றவர் என்ற கருத்தைக் கொண்டிருந்தார் என்று அர்த்தப்படுத்து வதில்லை; மாறாக இவைகள், தேவன் தம்முடைய மக்களுடன் ஒரு விசேஷித்த வழியில் இருக்கின்றார், தேவனுடைய பிரசன்னமானது மகாப் பரிசுத்த ஸ்தலத்தில் ஒரு விசேஷித்த வகையில் இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளுதலாக இருந்தன. [38]வேதாகமத்தில் வேறு யாரைக்காட்டிலும் சவுல் இந்த வார்த்தைகளை மிகவும் அதிகமாகக் கூறியுள்ளார் - ஆனால் அவைகள் ஒருபோதும் அவரை மாற்றியிருந்த தாகக் காணப்படவில்லை. உண்மையான மனந்திரும்புதலுக்கு முன்னதாக, பாவத்தை அறிக்கையிடுதல் என்பது நடைபெறவில்லையென்றால், அது (மனந்திரும்புதல் என்பது) தகுதியற்றதாகவே உள்ளது. [39]"யாசேரின் புத்தகம்" என்பது வசனம் 18ல் குறிப்பிடப்பட்டுள்ளது; இது யோசுவா 10:13லும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆதி காலக் கவிதைகளின் தொகுப்பாயிருந்தது என்பது உறுதி. [40]காத் மற்றும் அஸ்கலோன் என்பவை பெலிஸ்தரின் நகரங்களாயிருந்தன; அவைகள் பெலிஸ்தரின் நாடு முழுவதையும் சுட்டிக்காட்ட இங்கு நிற்கின்றன.*

*[41]கில்போவா மலைக்கு ஒரு சாபம் விடப்பட்டது; அங்குதான் சவுலும் யோனத்தானும் மரித்தார்கள். [42]கேடகங்கள் தோலினால் செய்யப்பட்டு, அவைகள் வெடிப்பு விடாதிருப் பதற்காக, அவற்றில் எண்ணெய் தடவப்பட்டது; இப்பொழுது சவுல் மரித்துப் போயிருந்தார், அவரது ஆயுதங்கள் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்தன. [43]வெற்றியில் கிடைத்த பொருட்களுடன் சவுல் யுத்தத்தில் இருந்து திரும்பும் பொழுது, அவரைக் கனப்படுத்துவதற்காக இவ்விதமான கொண்டாட்டங்கள்*

நடத்தப் பெற்றிருக்கலாம். [44]அநேகமாக, இது சவுல் மற்றும் யோனத்தான் ஆகியோரின் ஆயுதங்களைக் குறிப்பதற்குப் பதிலாக, அவர்களையே குறிப்பிட்டிருக்கலாம். [45]நாம் யாவரும் முழுமைக்கும் குறைவான வாழ்க்கையையே வாழ்கின்றோம் (ரோமர் 3:23). [46]William Painter in *The Palace of Pleasure,* quoted in Lewis Copeland, ed., *Popular Quotations for All Uses* (Garden City, N.Y.: Doubleday & Co., 1961), 392. [47]தேவன் "இனியும் நமது அக்கிரமத்தை நினைவுகூருவதில்லை", ஆனால் எல்லாம் அறிந்த தேவன் என்ற வகையில், அவர் இன்னமும் அது நடந்தது என்பதை அறிந்திருக்கின்றார். [48]Bob Stewart, *Revenge Redeemed* (Tarrytown, N.Y.: Fleming H. Revell Co., 1991). This volume is recommended reading for anyone. To my knowledge, it is the only book written for a popular audience and published by a major publishing house that contains teaching on the church and the conditions of salvation.